226-7/49 TRANSLATION OF BHAGAVAD GITA

# பகவத் கீதை

(உரையுடன்)

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மொழிபெயர்த்தது.

226-7
49

பக்கங்கள்
(59-129)

ஓம் சக்தி

# முதலத்யாயம்

## அர்ஜுனன் துயரம்



திருதராஷ்டிரன் சொல்லுகிறான்:-

சஞ்சயா, அற நிலமாகிய குருக்ஷேத்திரத்தில் போர் செய்ய விரும்பிக் கூடிநின்ற நம்மவர்களும் பாண்டவரும் என்ன செய்தனர்? (1)

சஞ்சயன் சொல்லுகிறான்:-

அப்போது துர்யோதன ராஜன் அணி வகுத்து நின்ற பாண்டவர் படையைப் பார்த்து விட்டு, ஆசார்ய(த்ரோண)னிடம் போய்ப் பின் வரும் வார்த்தை சொல்லலாயினான்:- (2)

"குருவே, துருபதன் மகனும் நின் சீடனுமாகிய திட்டத்துய்ம்னனால் வகுப்புற்ற இப் பெரிய பாண்டவர் படையைப் பார்! (3)

இதிலே சூரரும் பெரிய வில்லாளிகளும், போரில் வீமனையும் பார்த்தனையும் நிகர்த்தவருமாகிய பலர் இருக்கிறார்கள்:- யுயுதானன்; விராடன்; மகாரதனாகிய துருபதன்; (4)

திருஷ்டகேது; சேகிதானன்; வீர்யமுடைய காசிராஜன்; புருஜித்; குந்திபோஜன்; மனிதரேறாகிய சைவியன். (5)

வலிமை மிக்க யுதாமந்யு, உத்தமௌஜா என்ற வீரன்; ஸுபத்திரை மகன்; திரௌபதி மக்கள்; எல்லாருமே மகாரதர். (6)

இனி, எமது படைக்கு நாயகராய், நம்முள்ளே சிறந்தோரையும் தெரிந்து கொள். இரு பிறப்பாளரில் மேம்பட்டவனே, குறிப்பின் பொருட்டாக அவர்களை உனக்குச் சொல்லுகிறேன். (7)

~~நீ; பீஷ்மன்; கர்ணன்; போரில் வெற்றி பெறும்~~

நீ; பீஷ்மன்; கர்ணன்; பொருநர் கூட்டத்தை வெல்வோனாகிய கிருபன்; ஸோமதத்தன் மகன்; (8)

இன்னும் வேறு பல சூரர் என் பொருட்டு வாழ்க்கையைத் துறந்தோர்; பல வகைப் படைக் கருவிகளும் தாங்கிய படையோர்; எல்லோருமே போரில் நிபுணர். (9)

---

* குருக்ஷேத்திரப் போர் நடக்கையிலே கண்ணில்லாத திருதராஷ்டிர ராஜன் தான் அங்கே இல்லாமல் ஹஸ்தினாபுரத்தில் [illegible] இருந்து கொண்டு போர்க்களத்தில் நடக்கும் செய்திகளைத் தனக்கு [illegible] சஞ்சயன் என்ற மந்திரியை நியமித்திருந்தான். வேத வியாஸ முனிவர் [illegible] சஞ்சயன் போர்க்களத்தில் நிகழ்வதை [illegible] சொல்லுகிறான். [illegible]

[illegible]

[illegible] (10)

[illegible] சொன்னான். (11)

(அப்போது) [illegible] (12)

அப்பால், [illegible] ஆயிற்று. (13)

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

அப்பால், [illegible] (20)

---

[illegible]

கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான்: "அச்சுதா, படைகளிரண்டுக்கும் நடுவே என் தேரைக் கொண்டு நிறுத்துக" என்றான். (கேளாய், திருத ராஷ்ட்ர) ராஜனே! (21)

அர்ஜுனன் சொல்லுகிறான்:-

"சமரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்க வேண்டும். இந்தப் போர்த் தொடக்கத்தில் என்னொடு போர்க் கடவோர் யாவர்? (22)

கெட்ட மதி கொண்ட துர்யோதனுக்குப் பிரிய செய்யும் வண்ணம், இங்கு போர் விரும்பி [illegible] திரண்டு நிற்போரை நான் காண வேண்டும்" என்றான் (23)

(ஸஞ்ஜயன் சொல்லிக் கொண்டு வருகிறான்:)

(கேளாய்) பரத நாட்டரசே, இவ்வண்ணம் பார்த்த னுரைத்தது கேட்ட கண்ணன் மிகவும் மேன்மை கொண்ட அத் தேரை இரண்டு படைகளுக்கு மிடையே கொண்டு நிறுத்தினான். (24)

பீஷ்மனுக்கும் துரோணனுக்கும் மற்றெல்லா வேந்தருக்கும் எதிரே தேரை நிறுத்திக் கொண்டு:– "பார்த்தா, இங்கு கூடி நிற்கும் கௌரவரைப் பார்!" என்றான். (25)

அங்கு பார்த்தன் தன்னுடைய தந்தையரையும், பாட்டன்மாரையும், குரவரும், மாதுலரையும், அண்ணன் தம்பிகளையும், மக்களையும், பேரரையும், தோழர்களையும் நிற்பது கண்டான். (26)

அல்லாமலே மாமன்மாரும், நண்பரும், உதார நல்லாரும் இரண்டு படைகளிலும் நிற்கக் கண்டு, குந்தி மகனாகிய அப் பார்த்தன்— (27)

மிகவும் இரக்க முற்றவனாய்த் துயருடன் சொல்லுகிறான்: "கண்ணா, போர் செய்ய வேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தாரைக் கண்டு, (28)

என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என் உடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. (29)

* காண்டீவம் கையினின்று நழுவுகிறது. உடம்பில் [illegible] எரிச்சலுண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழல்கிறது. (30)

கேசவா, விபரீதமான சகுனங்களும் பல காண்கிறேன். போரிலே சுற்றத்தாரைக் மடிப்பதில் எனக்கு நன்மை தோன்ற வில்லை. (31)

கண்ணா, நான் வெற்றியை விரும்புகிலேன்; ராஜ்யத்தையும், இன்பங்களையும் வேண்டுகிலேன். கோவிந்தா, நமக்கு ராஜ்யத்தால் ஆவதென்? இன்பங்களால் ஆவதென்? உயிர் வாழ்க்கையால் வேறு யாவதென்னோ? (32)

---

* காண்டீவ மென்பது அர்ஜுனனுடைய வில்லின் பெயர்.

யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும் போகங்களையும் இன்பங்களையும் விரும்புகிறோமோ, அவர்கள் உயிரையும் செல்வங்களையுந் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள். (33)

குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும் - (இங்கு உளர்.) (34)

மதுசூதனா, யான் கொல்லப் படினும் இவர்களைக் கொல்ல விரும்புகிலேன். மூவுலகின் ஆட்சி பெறுதற் கெனினும் (இது செய்யேன்) பூமியின் பொருட்டுச் செய்வேனோ? (35)

ஜநார்த்தனா! திருதராஷ்டிரர் மக்களைக் கொன்று நாம் என்ன இன்பத்தை யடையப் போகிறோம்? இந்தப் பாதகரைக் கொல்வதனால் நம்மை பாவமே சாரும். (36)

ஆதலால், சுற்றத்தா ராகிய திருதராஷ்டிர புத்திரர்களைக் கொல்லுதல் நமக்குத் தகாது. மாதவா, சுற்றத்தாரைக் கொன்று பின் நாம் இன்புற் றிருப்ப தெப்படி? (37)

அவாவின் மிகுதியால் அறிவு மழுங்கி இவர்கள் குலத்தை யழிப்பதில் வரும் ~~[illegible]~~ தீமையையும், நண்பருக்குச் சதி செய்வதி லுள்ள பாதகத்தையும் காணாதவ ராயினும், (38)

ஜநார்த்தனா, குல நாசத்தால் ஏற்படுங் குற்றத்தை யுணர்ந்த நாம் இப் பாவத்தி ~~[illegible]~~ னின்று விலகும் வழி யறியா திருப்ப தென்னே? (39)

குல நாசத்தால் என்று முள்ள குல தர்மங்கள் அழிகின்றன. தர்மம் அழிவுறவே குல முழுதையும் அதர்மம் சூழ்கிற தன்றே? (40)

கண்ணா, அதர்மம் சூழ்வ ~~[illegible]~~ தால் குலஸ்திரீகள் கெட்டுப் போகிறார்கள். விருஷ்ணி குலத் தோன்றலே, மாதர் கெடுவதால் வர்ணக் குழப்ப முண்டாகிறது. (41)

~~வர்ணக் குழப்பத்தால் [illegible]~~

அக் குழப்பத்தால் குல ~~[illegible]~~ த்தைக் கெடுத்தோருக்கும் அக் குலத்தார்க்கும் நரக மேற்படுகிறது. இவர்களுடைய பிதிர்க்கள் பிண்டமும் நீரும் இன்றி வீழ்ச்சி யெய்துகிறார்கள். (42)

வர்ணக் குழப்ப முண்டாக்கும் படி குலக் கேடு செய்யும் இக் குற்றங்களால் ஜாதி தர்மங்களும் என்று முள்ள குல தர்மங்களும் கெட்டுப் போகின்றன. (43)

ஜநார்த்தனா, குல தர்மங்கள் கெட்டுப் போன மனிதருக்கு ~~[illegible]~~ எக்காலும் நரகத்தில் வாசம் ~~[illegible]~~ என்று கேள்விப் படுகிறோம். (44)

அந்தோ! அரசின்பத்தை விழைந்து சுற்றத்தாரைக் கொல்ல முற்படுவோம் நாம் பெரிய பாவஞ் செய்யத் துணிந்தோமே! (45)

கையி லாயுத மில்லாமல், எதிர்க்காமல், நின்ற என்னை இந்த
திருதராஷ்டிரர் புத்திரர் ஆயுதபாணிகளாய்ப் போரில் வெட்டி
விட்டாலும் அது எனக்குப் பெரிய நன்மையே யாம். (46)

ஸஞ்சயன் சொல்லுகிறான்:—

ஸமரக் களத்தில் இப்படி சொல்லி விட்டுப் பார்த்தன்
அம்புகளையும் வில்லையும் எறிந்து போட்டுத் துயரில் மூழ்கிய
மனத்தனாய்த் தேர்ப் பீடத்தின் மே லுட்கார்ந்து கொண்டான். (47)

இவ்வாறு உபநிஷத்தும் பிரம வித்தையும் யோக சாஸ்திரமும்
ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ~~[illegible]~~ ஸம்பாஷணையாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில் அர்ச்சுனன்
துயரம்" என்ற முதலத்யாயம்.

# இரண்டாம் அத்யாயம்





## ஸாங்க்ய யோகம்

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:—

அவ் வண்ணம் இரக்க முற்றவனாய்க் கண்ணீர் நிரம்பிய சோக விழிகளுடன் வருந்திய அர்ஜுனனை நோக்கி மதுசூதனன் சொல்லுகிறான்:— (1)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

இந்த நெருக்கடியில் இவ் அழுக்குச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது ஆரியருக்குத் தகாதது. வானுலகைத் தடுப்பது; அபகீர்த்தி தருவது—அர்ஜுனா. (2)

பார்த்தா, பேடித் தன்மை யடையாதே! இது நினக்குப் பொருந்தாது. இழிபட்ட மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில்; பகைவரைச் சுடுவோனே! (3)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

மதுசூதனா, பீஷ்மனையும் துரோணனையும் போரில் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன்? ~~[illegible]~~, இவர்கள் தொழுதற் குரியர்; பகைவரை யழிப்போய்! (4)

பெரியோராகிய குருக்களைக் கொல்லாமல், உலகத்திலே பிச்சை யெடுத்துண்பதும் நன்று. பொருளை விரும்பும் குருக்களைக் கொன்று நான் துய்க்கும் இன்பங்களில் உதிரத்திற் றோய்ந்தனவாம். (5)

மேலும், நாம் வெல்லுதல், இவர்கள் நம்மை வெல்லுதல்— இவற்றுள் எது நமக்கு மேன்மை யென்பது விளங்கவில்லை. எவரைக் கொன்று பின் நாம் உயிர் கொண்டு வாழ விரும்போமோ, அத்தகைய த்ருதராஷ்ட்ரக் கூட்டத்தார் எதிர் முனையில் வந்து நிற்கிறார்கள். (6)

~~[illegible]~~ சிறுமை யாகிய குறையால் இயல்பு பழுதுபட்டவனாய், அற மின்னதென் றுணராமல் மயங்கிய அறிவுடன், யான் உன்னைக் கேட்கிறேன். எது நன்றென்பது எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லுக. நான் உன் சீடன். உன்னையே சரணடைந்தேன். கட்டளை தருக. (7)

புவியின் மேல் நிகரில்லாத செல்வமுடைய ராஜ்யம் பெறினும், அன்றி வானோர் மீது ஆட்சி பெறினும், புலன்களை யுலர்த்தும் இந்தத் துயர் எம்மை விட்டு நீங்கு மென்று தோன்றவில்லை. (8)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:—

பகைவரைத் தொலைத்திடும் பார்த்த னன்று
பசு நிரை காக்கும் பகவனை நோக்கிப்
"போர் செய்யேன்" என்று
வாய் புதைத்து நின்றான். (9)

பாரதா, அப்போது கண்ணன் புன்னகை பூத்து, இரண்டு படைகளுக்கு
நடுவே துயருற்று நின்ற பார்த்தனை நோக்கி இவ் வசன முரைக்
கிறான்:- (10)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:-

துயரப் படத் தகாதார் பொருட்டுத்
துயர்ப் படுகின்றனை.
ஞான வுரைகளு முரைக்கிறாய்!
இறந்தார்க்கேனும் இருந்தார்க்கேனுந்
துயர் கொள்ளார் அறிஞர். (11)

இதன் முன் எக் காலத்திலும் நான் இல்லா திருந்ததில்லை. நீயும்
இவ் வரச ரெவரும் அப்படியே. இனி நாம் என்றைக்கும்
இல்லாமற் போகவும் மாட்டோம். (12)

ஆத்மாவுக்கு இவ் வுடலில் எங்ஙனம் பிள்ளைப் பிராயமும் இளமையும்
மூப்புந் தோன்றுகின்றனவோ, அங்ஙனமே மற்றொரு சரீரப் ப்ராப்தியுந்
தோன்றுகிறது. தீரன் இதில் கலக்க மாட்டான். (13)

குந்தியின் மகனே, குளிரையும் வெப்பத்தையும் இன்பத்தையும் துன்பத்தையுந்
தரும் இயற்கையின் தீண்டுதல்கள் தோன்றி மறையும் இயல் புடையன;
என்று மிருப்பன வல்ல. பாரதா, அவற்றைப் பொறுத்துக் கொள். (14)

யாவன் இவற்றால் துயர்ப் படானோ,
இன்பமுந் துன்பமு நிகரெனக் கொள்வானோ,
அந்தத் தீரன்,
சாகா திருக்கத் தகுவான். (15)

இல்லாத துண்மை யாகாது. உள்ள தில்லாத தாகாது. உண்மை
யறிவார் இவ் விரண்டுக்கு முள்ள வேற்றுமை யுணர்வார். (16)

இவ் வுலக முழுதும் பரந்து நிற்கும் பொருள் அழிவற்ற
தென்றறி. கேடற்றது; அதனை யழித்தல் யார்க்கும் இயலாது. (17)

ஆத்மா சாச்வதன்; அழிவற்றான்; அளவிடத் தகாதான். எனினும்
அவனுடைய வடிவங்கள் இறுதி யுடையன என்பர். ஆதலால், பாரதா,
போர் செய். (18)

இவன் கொல்வானென்று நினைப்போனும், கொல்லப் படுவானென்று
நினைப்போனும் — இருவரும் அறியாதார். இவன் கொல்வது மில்லை; கொல்லப்
படுவது மில்லை (19)

இவன் பிறப்பது மில்லை; எக் காலத்திலும் இறப்பது மில்லை. இவன்
ஒரு முறை யிருந்து பின்னர் இல்லாது போவது மில்லை. இவன் பிறப்
பற்றான்; அனாதன். இவன் சாச்வதன்; பழையோன். உடம்பு கொல்லப்
படுகையில் இவன் கொல்லப் படான். (20)

இப் பொருள் அழிவற்றது, பிறப்பற்றது, என்று முளது — இங்ஙன முணர்வான்
கொல்வ தெவனை? அவன் கொல்விப்ப தெவனை? (21)

நைந்த துணிகளைக் கழற்றி எறிந்து விட்டு, மனிதன் புதிய துணிகள் கொள்வது போல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறான். (22)

இவனை ஆயுதங்கள் வெட்ட மாட்டா; தீ எரிக்காது; நீர் இவனை நனைக்காது; காற்று உலர்த்தாது. (23)

பிளத்தற் கரியவன்; எரித்தற்கும் நனைத்தற்கும், உலர்த்துதற்கும் அரியவன். நித்தியன்; எங்கும் நிறைந்தவன். உறுதி யுடையான்; அசையாதான். என்று மிருப்பான். (24)

தெளிவற் கரியான் சிந்தனைக் கரியான்
மாறுத லில்லாதா னென்பர்
ஆதலால். இவனை இவ்வணம் அறிந்து நீ
துயர்ப் படா திருக்கக் கடவாய். (25)

அன்றி நீ இவனை நித்தமும் பிறந்து நித்தமும் மடிவா னென்று கருதினும், அப்போதும், பெருந் தோளுடையாய், நீ இவன் பொருட்டுத் துயருறல் தகாது. (26)

பிறந்தவன் சாவ துறுதி யெனில்,
செத்தவன் பிறப்ப துறுதி யெனில்,
இந்த விலக் கொணாச் செய்திக்கு நீ அழுவது தகுதி யன்று. (27)

பாரதா, உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; இடை நிலைமை தெளிவுடையது; இவற்றின் இறுதியும் தெளிவில்லை. இதிற் துயர்ப் படுவதென்னே? (28)

இந்த ஆத்மாவை
வியப் பென ஒருவன் காண்கிறான்,
வியப் பென ஒருவன் சொல்கிறான்,
வியப் பென ஒருவன் கேட்கிறான்,
கேட்கினும், இதனை அறிவான் எவனு மிலன். (29)

பாரதா, எல்லா உடம்பிலு முள்ள இந்த ஆத்மா — கொல்ல முடியாதவன்; ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா! (30)

ஸ்வதர்மத்தைக் கருதியும் நீ நடுங்குதல் இசையாது. அறப் போரைக் காட்டிலும் உயர்ந்த தொரு நன்மை மன்னர்க் கில்லை. (31)

தானே வந் தெய்துவது;
திறந்து கிடக்கும் பொன் னுலக வாயிற் போன்றது,
இத் தகைய போர் கிடைக்கப் பெறும் ~~[illegible]~~ மன்னர் இன்ப
முடையார்! (32)

அன்றி நீ இந்த தர்ம யுத்தத்தை நடத்தாமல் விடுவா யாயின்,
அதனால் ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையும் கொன்று பாவத்தை யடைவாய். (33)

லகத்தார் உனக்கு மாறாத வசையை யுரைப்பார்கள். புகழ்பெற்றோன் பின்னர் எய்தும் அபகீர்த்தி மரணத்திலும் கொடிதன்றோ? (34)

நீ அச்சத்தால் போரை விட்டு விலகிய தாக மஹாரதர் கருதுவார்கள். அவர்களுடைய நின்று மதிப்பைப் பெற்ற நீ இகழ்ச் சிறுமை யடைவாய். (35)

உனக்கு வேண்டாதார் சொல்லத் தகாத வார்த்தைகள் பல சொல்லுவார்கள். உன் திறமையைப் பழிப்பார்கள். இதனைக் காட்டிலும் அதிக மான துன்ப மேது? (36)

கொல்லப் படுவையேல் வானுல கெய்துவாய்.
வென்றால் பூமி யாள்வாய்.
ஆதலால் போர் செய்யத் துணிந்து நீ
எழுந்து நில். (37)

இன்பம், துன்பம்; இழவு, பேறு; வெற்றி, தோல்வி;
இவற்றை நிக ரெனக் கொண்டு நீ,
போர்க்குத் தொடங்கு. இவ்வாறு புரிந்தால்
பாவ மெய்தாய். (38)

இவ்வாறு உனக்கு ஸாங்கிய வழிப் படி புத்தி சொன்னேன். இனி யோக வழியால் சொல்லுகிறேன்; கேள். இந்த புத்தி கொண்டவன் கர்மத் - தளைகளைச் சிதற வடிப்பான். (39)

~~ஆத்மா [illegible]; [illegible] [illegible].~~

இதில் முயற்சிக் கழிவில்லை. இது வழுப்பு நீங்கிய செய்கையு மன்று. இந்தத் தர்மத்தில் சிறி திருப்பினும், அஃது ஒருவனைப் பேரச்சத்தி னின்று காப்பாற்றும். (40)

குரு குலத் தோன்றலே; உறுதி யுடைய புத்தி இவ் வுலகத்தில் ஒருமை யுடையது. உறுதி யில்லாதோரின் மதி பல கிளைப் பட்டு; முடி வற்றது. (41)

வேதங்களின் வெளி யுரையில் மகிழ்வார் சிலர், புஷ்பங்கள் போன்ற (அலங்காரச்) சொற்கள் பேசுகிறார்கள். தமது கொள்கை யொழிய மற்றது பிழை யென்கிறார்கள். (42)

இவர்கள் காமிகள்; சொர்க்கத்தைப் பர மாகக் கொண்டோர். பிறப்புக்கும் தொழிலுக்கும் பயன் வேண்டுவோர்; போகத்தையும் ஆட்சியையும் வேண்டுவோர், பல வகை யான கிரியைகளைக் காட்டிப் பேசுகிறார்கள். (43)

இவர்கள் சொல்வதைக் கேட்டு மதி மயங்கி, போகத்திலும் ஆட்சியிலும் பற்றுதலோ டுடைய நிச்சயபுத்தி ஸமாதானத்தில் நிலை பெறாது. (44)

மூன்று குணங்களுக் குட்பட்டவற்றைக் குறித்து வேதங்கள் பேசு கின்றன. ~~[illegible]~~ அர்ஜுனா, நீ மூன்று குணங்களையும் கடந்தோ னாகுக. *இருமைக ளற்று, எப்போதும் உண்மையில் நின்று, யோக க்ஷேமங்களைக் கருதாமல், ஆத்மாவை வசப் படுத்தியவ னாகுக. (45)

*இருமைகள்: இன்பம், துன்பம்; [illegible], [illegible]; [illegible], [illegible] [illegible]

எல்லாம் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டம் என்ன பொருளுடையது; அன்ன பொருளே ஞான முடைய பிராமணனுக்கு வேதங்களெல்லாம் உடையன. (46)

தொழில் செய்யத் தான் உனக் கதிகார முண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக் கதிகார மில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமையு மாகாதே. (47)

தனஞ்ஜயா, யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக் கொண்டு தொழில்களைச் செய்க. நடு நிலையே யோக மெனப் படும். (48)

தனஞ்ஜயா, *புத்தி யோகத்தைக் காட்டிலும் கர்மம் மிகத் தாழ்ந்தது. புத்தியைச் சரணடை. பயனைக் கருதுவோர் லோபிகள். (49)

புத்தி யுடையவன் இங்கு நற் செய்கை, தீச் செய்கை இரண்டையுந் துறக்கிறான். ஆதலால் நீ யோகத்திலே பொருந்துவாய். யோகம் செயல்களில் திறமை யாகும். (50)

புத்தி யுடைய மேதாவிகள் செய்கையால் விளையும் பயனைத் துறந்து, பிறவித் தளை நீங்கி, துன்ப மற்ற பதவி யடைகிறார்கள். (51)

உனது புத்தி மோகக் குழப்பத்தைக் கடந்து செல்லு மாயின், அப்போது கேட்கப் போவது, கேட்கப் பட்டது என்றிரண்டிலும் உனக்கு வெறுப் புண்டாகும். (52)

உனது புத்தி கேள்வியாலே கலக்க முறாதாய், உறுதி கொண்டு, ஸமாதி நிலையில் அசைவற்று நிற்கு மாயின், அப்போது யோகத்தை அடைவாய். (53)

அர்ஜுனன் சொல்லுகிறான்:-

கேசவா, உறுதி கொண்ட அறிவுடன் ஸமாதியில் நிற்போன் எவ்வாறு பேசுவான்? ஸ்திர புத்தி யுடையவன் என்ன சொல்வான்? எப்படி யிருப்பான்? எதனை யடைவான்? (54)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:-

பார்த்தா, ஒருவன் தன் மனத்தில் எழும் விருப்பங்களனைத்தையும் துறந்து தன்னிலே தான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது ஸ்திர புத்தி யுடையவ னென்று சொல்லப் படுகிறான். (55)

துன்பங்களிலே மனங் கெடாதவனும்,
இன்பங்களிலே ஆவ லற்றவனும்,
அச்சமும் சினமுந் தவிர்த்தானாயின்
அம் முனி,
மதியிலே உறுதி வாய்ந்தவ னெனப்படும். (56)

* புத்தி யோகம் - புத்தியால் வாய்ந்து நிற்றல். கர்மம் = தொழில்.

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் மகிழ்ச்சி யற்றவனோ, ஆவலுமின்றிப் பகைப்பது மின்றி யிருப்பானோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது. (57)

ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்வது போல், எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை யொருவன் மீட்க வல்லானாயின், அவனறிவே நிலை கொண்டது. (58)

தம்மைக் கொடாது ஜீவன் உடைமையை விஷயங்கள் தாமே விலகிக் கொள்கின்றன. எனினும் அவற்றின் மேலுள்ள சுவையை யவன் மறப்பதில்லை. பரம் பொருளைக் காண்பானாயின், அச் சுவையும் நீங்கி விடும். (59)

குந்தியின் மகனே, (அவ) மெய்யறிவுடைய ~~[illegible]~~ புருஷனிடத்திலே கூட இந்திரியங்கள் வலிந்து சென்று அவனுடைய போது தம் மேன் மனத்தையும் வலிய பறித்துச் செல்கின்றன. (60)

அவற்றை யெல்லாம் அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாய், என்னையே பரமாகக் கொண்டு, புலன்களை வசப் படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது. (61)

மனிதன் விஷயங்களைக் கருதும் போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. (62)

சினத்தால் ~~[illegible]~~ மயக்கம்; ~~[illegible]~~ மயக்கத்தால் நினைவுத் தவறுதல்; நினைவுத் தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான். (63)

விருப்பமும் பகைத்தலு மின்றி, தனக்கு வசப் பட்ட புலன்க(ளுடன்) ~~[illegible]~~ ~~[illegible]~~ விஷயங்களிலே உலாவுவோனாயினும் தன் வசப்படுத் தான் உட்பட்ட மனிதன் ஆறுத லடைகிறான். (64)

சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. ஏனெனில் சாந்தி பெற்ற பின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது. (65)

யோக மில்லாதவனுக்கு புத்தி யில்லை. யோக மில்லாதவனுக்கு மனோபாவனை யில்லை. மனோபாவனை யில்லாதவனுக்கு சாந்தி யில்லை. சாந்தியில்லாதவனுக்கு இன்ப மேது? (66)

இந்திரியங்கள் சஞ்சரிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம் மனம், நீரில் தோணியைக் காற்று போக்குவது போல், அறிவை போக்குகிறது. (67)

ஆதலால், பெருந் தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைக் கட்ட வல்லான் எவனோ, அவனறிவே நிலை கொண்டது. (68)

எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக் கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேரம் எதுவோ அதுவே முனிக்கு இரவு. (69)

கடலில் நீர்த் தொகுதிகள் வந்து வருகையால் அது மேன்மேலும் நிரப்புதற் குரியதாய் அசையா நிலை கொண்டு புகும்பது போல, விருப்பங்கள் தன் னுள்ளே புகும் போ நிலையாதான் எவனோ அவன் சாந்தி யடைகிறான். விருப்பங்களை விரும்புவோன் அதனை யடையான். (70)

இச்சையற்றோன், எல்லா இன்பங்களையும் துறந்தான், எனதென்ப தற்றோன், யானென்ப தற்றோன், அவனே சாந்தி நிலை யடைகிறான். (71)

பார்த்தா, இது பிரம ஸ்திதி. இதை யடைந்தோன் பிறகு மயக்குறு தில்லை. இறுதிக் காலத்தி லேனும் இதில் நிலை கொள்வோன் பிரம நிர்வாண மெய்துகிறான்.

இவ்வாறு உபநிஷத்துக்களும், பிரம வித்தையும், யோகசாஸ்திரமும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமு மாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் "ஸாங்கிய யோகம்" என்ற இரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

## மூன்றாம் அத்யாயம்.

## கர்ம யோகம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

ஜநார்த்தனா, செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்த தென்பது நின் கொள்கை யாயின், இந்தக் கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவ தென்னே, கேசவா? (1)

குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயக்கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை தரு மென்பதை உறுதிப் படுத்தி ஒரே வார்த்தை யாகச் சொல். (2)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

இவ் வுலகத்தில் இரண்டு வித நிஷ்டை முன்னால் என்னாற் கூறப் பட்டது: ஸாங்கியர்களின் ஞான யோகத்தால் எய்துவது; யோகிகளின் கர்ம யோகத்தால் எய்துவ தொனா. (3)

தொழில்களைத் தொடங்காமலே யிருப்பதனால் மனிதன் செயலற்ற நிலை யடைவதில்லை. துறவாலேயே மனிதன் சித்தியை பெற்று விட மாட்டான். (4)

எவனும் ஒரு கணப் பொழுதேனும் செய்கை யின்றி யிருப்பதில்லை. இயற்
கையால் பிறக்கும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசமாக்கித் தொழில்
புரிவிக்கின்றன. (5) 13

கர்மேந்திரியங்களை அடக்கிக் கொண்டு, ஞான இந்திரிய~~ங்கள்~~ விஷயங்களை
மனதால் ஸ்மரித்துக் கொண் டிருப்போ னெவனோ மூடாத்மா. பொய்
யொழுக்க முடையவ னென்று சொல்லப் படுகிறான். (6)

அர்ஜுனா, எவன் இந்திரியங்களை மனதால் கட்டுப் படுத்திக் கொண்டு,
கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகிறானோ, அவன் சிறந்தவன். (7)

விதிக்கப் பட்ட தொழிலை நீ செய். ~~[illegible]~~ தொழில் தொழி லின்மையைக்
காட்டிலும் சிறந்த தன்றோ? தொழி லின்றி யிருந்தால் உடம்பைக்
கொண்டு செலுத்துதல் கூட உனக் கியலாமல் போய் விடும். (8)

வேள்வியின் பொருட் டென்று செய்யப் படுவது தவிர மற்றைத் தொழில்
மனிதனுக்குத் தளை யாகிறது. ஆதலால், குந்தி மகனே, பற்றைக் களைந்து
தொழில் செய்து கொண் டிரு. (9)

முன்பு பிரமதேவன் வேள்வியுடனே உயிர்களைச் சேர்த்து ஒருமிக்கப்
படைத்துச் சொல்லுகிறான்:— "இதனால் பல்குவீர்களாக; நீங்கள் விரும்பும்
விருப்பங்களை யெல்லாம் உங்களுக் கிது கறந்து தரும்". (10)

இதனால் தேவர்களைக் கருதுக; அந்த தேவர் உங்களைக்
கருதக் கடவர். (இவ்வாறு) பரஸ்பர மொருவரை பாவனை செய்வதனால்
உயர்ந்த நன்மை பெறுவீர்கள். (11)

வேள்வியால் பாவனை செய்யப் பட்ட தேவர் உங்களுக்கு விரும்பிய
போகங்களை யளிப்பார். அவர்களுக்குக் கைம்மாறு
செய்யாமல் அவரீந்த கொடைப்பயனை உண்போன் கள்வனே யாவான். (12)

வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர் எல்லாப் பாவங்களி
னின்றும் விடுபடுகிறார்கள். தம் பொருட் டென்று மாத்திரமே
உணவு சமைக்கும் பாவிகள் பாவத்தை யுண்ணுகிறார்கள். (13)

அன்னத்தால் உயிர்கள் உண்டாகின்றன. மழையால் உணவு தோன்று
கிறது. மழை வேள்வியால் ஆகிறது. வேள்வி செய்கையினின்று
பிறப்பது. (14)

செய்கை பிரமத்தி னின்றும் பிறப்ப~~து~~தென் றுணர். பிரமம்
அக்ஷரத்தினின்றும் தோன்றுவது. ஆதலால் எங்கும் நிறைந்த பிரமம்
எப்போதும் வேள்வியில் நிலை பெற்றது. (15)

இவ்வண்ணம் சுழலும் சக்கரத்தை இவ்வுலகில் பின்பற்றி ஒழுகா
திருப்போன் பாப வாழ்க்கை யுடையான்; புலன்களிலே களித்தான்;
பார்த்தா, அவன் வாழ்க்கை வீணே யாகும். (16)

~~அவனுக்குச் செய்கையால் யாதொரு பயனுமில்லை செயலின்றி யிருப்~~
~~பதிலும் அவனுக்குப் பயனில்லை. எவ் வுதவிப் பயனையுங் கருதி அவன்~~
எவ் வுயிரையும் ~~சார்ந்து நிற்ப தில்லை~~

தன்னாலே தான் இன்புறுவான்; தன்னாலே தான் திருப்தி யடைவான்;
தன்னிலே தான் மகிழ்ந் திருப்பான்; அவனுக்குத் தொழி லில்லை (17)
அவனுக்குச் செய்கையால் யாதொரு பயனு மில்லை; செயலின்றி யிருப்
பதிலும் அவனுக்குப் பய னில்லை. எவ் வுதவிப் பயனையுங் கருதி அவன்
எந்த உயிரையுஞ் சார்ந்து நிற்ப தில்லை. (18)

ஆதலால் எப் போதும் பற்று நீக்கிச் செய்யத் தக்க தொழிலைச்
செய்து கொண் டிரு. பற்றி லாமல் தொழில் செய்து கொண்
டிருக்கும் மனிதன் பரம்பொருளை யெய்துகிறான். (19)

ஜனகன் முதலியோர் செய்கையாலேயே ஸித்தி பெற்றார்கள்.
உலக நன்மையைக் கருதியும் நீ தொழில் புரிதல் தகும் (20)

எதனை யெதனை உயர்ந்தோன் செய்கிறனோ, அதையே ~~மற்றோர்~~
மற்ற மனிதர் பின்பற்றுகிறார்கள். அவன் எதைப் பிரமாணமாக்
கிறனோ, அதையே உலகத்தார் தொடர்கிறார்கள். (21)

பார்த்தா, மூன் றுலகத்திலும் எனக்கு யாதொரு கடமை
யில்லை. நான் பெற் றிராத பேறு மில்லை. எனினும் நான்
தொழிலிலே தான் ஈடுபடுகிறேன் (22)

நான் சோம்பல் நீக்கி எப்போதும் தொழில் செய்து கொண்
டிரா விடின், பார்த்தா, எல்லா மக்களும் எனது
வழியையே பின் பற்றுவார்கள். (23)

நான் தொழில் செய்யா விட்டால் இந்த உலகங்களெல்லாம்
அழிந்து போய் விடும். குழப்பத்தை நான் செய்வோன் ~~குழப்ப~~
ஆவேன். இந்த மக்களை யெல்லாம் கொல்லோ னாவேன். (24)

பாரதா, அறிவில்லாதார் செய்கையில் பற்றுடையோராய் எப்படித்
தொழில் செய்கிறார்களோ, அப்படியே அறிவுடையோன் பற்றை நீக்கி
உலக நன்மையை நாடித் தொழில் செய்ய வேண்டும். (25)

அறிவுடையோன் தொழிலிற் பற்றுதல் கொண்ட அஞ்ஞானிகளுக்கு
புத்தி பேதம் உண்டாக்கக் கூடாது. அவன் யோகத்தில் நின்று தொழில் செய்து
எல்லாத் தொழில்களையும் கிளர்ச்சி யுடையன வாக்க வேண்டும். (26)

எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப் படுகின்றன. அகங் காரத்தால் மயங்கியவன் "நான் செய்கிறேன்" என்று நினைக்கிறான். (27)

குணம், செய்கை இவற்றுடைய பாகுபாட்டின் உண்மை யறிந்தோன் 'குணங்கள் குணங்களில் இயலுகின்றன' என்று கருதிப் பற்றற் றிருப்பான். (28)

இயற்கையில் குணங்களால் மயங்கியவர்கள் குணங்களிலும் தொழில்களிலும் பற்றுத லடைகிறார்கள். சிற்றறிவுடைய அந்த மந்தர்களை முழுதுணர்ந்த ஞானி உழல்விக்கக் கூடாது. (29)

எல்லாச் செய்கைகளையும் உள்ளாத்மாவில் எனக் கர்ப்பணமாகத் துறந்து விட்டு, ஆசை நீக்கி, எனதென்பதற்று, மனக் காய்ச்சல் தீர்ந்தவனாய்ப் போர் செய்யக் கடவாய். (30)

என்னுடைய இந்த நித்ய மதக் கொள்கையை எந்த மனிதர் சிரத்தை யுடையோராய்ப் பொறாமை யின்றிப் பின்பற்றுகிறார்களோ, அவர்களும் தொழில்களினின்று விடுபடுகிறார்கள். (31)

என்னுடைய இக் கொள்கையை யாவர் பொறாமையால் பின்பற்றாது விடுகிறார்களோ, எல்லா ஞானமு மில்லாத அம் மூடர்கள் நாசமடைந் தோராகவே தெரிந்து கொள். (32)

ஞானமுடையவன் கூடத் தன் இயற்கைக்குத் தக்கபடியே நடக்கிறான். உயிர்கள் இயற்கைப் படி நடக்கின்றன. அடக்குதல் பயன் படாது. (33)

இந்திரியத்துக்கு இந்திரிய விஷயங்களில் விருப்பு வெறுப்புகள் பொருந்தியிருக்கின்றன. இவ் விரண்டுக்கும் ஒருவன் வசப் படலாகாது. இவை இவனுக்கு வழித் தடைகளாம். (34)

நன்றாகச் செய்யப் படும் பர தர்மத்தைக் காட்டிலும், குண மற்றதாயினும் ஸ்வதர்மமே சிறந்தது. ஸ்வதர்மத்தில் இறத்தல் நன்றேயாம். பரதர்மம் பயத்துக் கிட மானது. (35)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

விருஷ்ணி குலத் தோன்றலே, மனிதனுக் கிச்சை யில்லாத போதும் அவனை வலியக் கொண்டு புகுத்துவது போல், தூண்டிப் பாவம் செய்விப்பது யாது? (36)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

அஃது விருப்பமும் சினமும்; ரஜோ குணத்திற் பிறப்பது; பே ரழிவு செய்வது; பெரும் பாவம். இதனை இங்கு சத்ருவாகத் தெரிந்து கொள். (37)

புகையால் தீ மூடப் பட்டிருப்பது போலவும், கண்ணாடி அழுக்கால் மாசு படுவது போலவும், கர்ப்பத்தைக் கருப்பை சூழ்ந் திருப்பது போலவும், இது இவ் வுலகைச் சூழ்ந்திருக்கிறது. (38)

குந்தியின் மகனே, விருப்ப மெனப் படும் இந் நிரப் பொண்ணாத் தீ ஞானிக்கு நித்யப் பகையாய் ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது. (39)

இந்திரியங்களும், மனமும் புத்தியும் இதற்கு நிலைக் களனென்பர். இவற்றால் இது ~~[illegible]~~ ஞானத்தைச் சூழ்ந்து மனிதனை மயக்குவிக்கிறது. (40)

ஆதலால், பாரத ரேறே, நீ தொடக்கத்திலே இந்திரியங்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்தப் பாவத்தைக் கொன்று விடு. (41)

இந்திரியங்களை உயர்ந்தன வென்பர். அவற்றினும் மனம் மேல். மனத்தைக் காட்டிலும் புத்தி மேல். புத்திக்கு மேலே அவன் (ஆத்மா). (42)

இங்ஙனம் புத்திக்கு மேலான பொருளை உணர்ந்து, தன்னைத் தான் உறுதிப் படுத்திக் கொண்டு, வெல்லற் கரிய விருப்ப மாகிய பகைவனைக் கொல்லக் கடவாய், பெருந் தோளுடையாய்! (43)

இங்ஙனம் உபநிஷத்தும் ப்ரஹ்ம வித்தையும் யோகசாஸ்திரமும் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதமு மாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில் "கர்ம யோகம்" என்ற மூன்றாம் அத்யாயம் முற்றிற்று.

# 4-ஆம் அத்யாயம்

## ஞான யோகம்

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

இந்த அழிவற்ற யோகத்தை நான் முன்னர் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மநுவுக்குச் சொன்னான். மநு இக்ஷ்வாகு (ராஜனு)க்குக் கூறினான். (1)

இவ்வாறு பரம்பரையாகக் கிடைத்த இதனை ராஜரிஷிகள் உணர்ந்திருந்தனர். பரந்தபா, அந்த யோகம் கால மிகுதியால் இவ் வுலகத்தில் இழக்கப் பட்டது. (2)

அந்தப் பழைய யோகத்தையே இன்று நான் உனக்குச் சொன்னேன்; நீ என் பக்தனும் தோழனு மென்பது கருதி. இது மிகவும் உயர்ந்த ரஹஸ்யம். (3)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

உன் பிறப்புப் பிந்தியது; விவஸ்வா னுடைய பிறப்பு முந்தியது. நீ இதை ஆதியில் சொன்னவ னென்று நான் தெரிந்து கொள்வ தெப்படி? (4)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

அர்ஜுனா, எனக்குப் பல ஜன்மங்கள் கழிந்து விட்டன. உனக்கும் அப்படியே. பரந்தபா, நான் அவற்றை யெல்லாம் அறிவேன்; நீ அவற்றை அறியாய் (5)

பிறப்பற்றே னெனினும், அழி வற்றே னெனினும், உயிர்கட் கெல்லாம் ஈசனே யெனினும், யான் எனது ப்ரக்ருதியில் நிலை பெற்று ஆத்ம மாயையால் பிறப் பெய்துகிறேன். (6)

பாரதா, எப் போ தெப் போது தர்மம் அழிந்து போய், அதர்மம் எழுச்சி பெறுமோ, அப் போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன். (7)

நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை
நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன். (8)

எனது தெய்வத்தன்மை கொண்ட பிறப்பும் செய்கையும் இங்ஙனமென்
பதை உள்ளபடி உணர்வோன் உடலைத் துறந்த பின்னர் மறு பிறப்
பெய்துவதில்லை. அர்ஜுனா, அவன் என்னை எய்துகிறான். (9)

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மய
மாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத் தவத்தால் தூய்மை பெற்று
என் னியல் பெய்தினோர் பலர். (10)

யாவர் என்னை எவ்வண்ணம் வேண்டுகிறார்களோ, அவர்களை நான் அவ்வண்ண
மே சார்கிறேன். பார்த்தா, மனிதர் யாங்கணும் என் வழியையே பின்
பற்றுகிறார்கள். (11)

தொழில்களின் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளைப் பூஜை
செய்கிறார்கள். மனித உலகத்தில் தொழிலினின்றும் வெற்றி விரைவில் விளைவ
தன்றோ? (12)

குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களைச்
சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச்
செய்தோ னென்றுணர். (13)

என்னைக் கர்மங்கள் தீண்டுவதில்லை. எனக்குக் கர்மப் பயனில்
விருப்பமில்லை. இங்ஙனம் என்னை யறிவோன் கர்மங்களால் கட்டுப்
படமாட்டான். (14)

முன் காலத்தில் முக்தியை வேண்டினோரும் இதை யுணர்ந்து தொழிலே
செய்தனர். ஆதலால் முன்னோர்கள் முன்பு செய்தபடி நீயும் தொழிலே
செய்யக் கடவாய். (15)

எது தொழில்; எது தொழிலல்லாதது; என்று பகுப்பதில் ஞானிகளும்
மயக்க மெய்துகிறார்கள். ஆதலால் உனக்குத் தொழிலியல்பை உணர்த்துகிறேன்.
இதை அறிவதனால் தீமையினின்றும் விடுபடுவாய். (16)

தொழிலின் இயல்பும் தெரிய வேண்டும்; தீத்தொழில் இயல்புந் தெரிய
வேண்டும். தொழிலின்மையின் இயல்புந் தெரிய வேண்டும். கர்மத்தின்
நடை மிகவும் ஆழ்ந்தது. (17)

செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும்
எவன் காண்கிறானோ, அவனே மனிதரில் அறிவுடையோன். அவன் எத்
தொழில் செய்கையாயினும் யோகத்தி லிருப்பான். (18)

எவனுடைய செய்கைத் தொடக்கமெல்லாம் விருப்ப நினைவு
தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத்தீயால் எரிக்கப்பட்டன
வாம். அவனை ஞானிகள் அறிவுடையோ னென்கிறார்கள். (19)

கர்மப் பயனிலே பற்றைக் களைந்தவனாய், எப்போதும் திருப்தி
யுடையோனாய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்து
கொண் டிருக்கையிலும் செயலற்றோனாவான். (20)

ஆசை யற்றவனாய், சித்தத்தை ஆத்மாவால் கட்டுப் படுத்தி, எல்லாத் தானங்களையும் வாங்குவதைத் துறந்து, வெறுமே சரீரத் தொழில் மாத்திரம் செய்து கொண்டு வருகிறவன் பாவத்தை யடைய மாட்டான். (21)

தானாக வந்து எய்தும் லாபத்தில் ஸந்தோஷ முடையவனாகி, இருமைகளைக் கடந்து, பொறாமை யற்றவனாய், வெற்றியிலும் தோல்வியிலும் ஸம நிலை பெற்றோன் தொழில் செய்தாலும், அதனால் கட்டுப் படுவதில்லை. (22)

பற்றற்றவன்; விடுதலை கொண்டான்; ஞானத்தில் நிலை நிறுத்திய உள்ளத்தோன்; வேள்வியெனக் கருதித் தொழில் புரிவான்; — அவனுடைய கர்மமெல்லாம் தானே கரைந்து போய் விடுகிறது. (23)

பிரம்மத்துக்கு அர்ப்பணமாக, பிரம்ம அவியை, பிரம்மத் தீயில், பிரம்மத்தால் ஹோமம் பண்ணுவோன்; பிரம்மத்தின் செய்கையால் ஸமாதான மெய்திநோன்; அவன் பிரம்மத்தை அடைவான். (24)

சில யோகிகள் தேவர்க்குச் செய்யப் படும் வேள்வியை வழிபடுகிறார்கள். வேறு சிலர் பிரம்மத் தீயில் வேள்வியையே ஆஹுதி செய்து வேட்கின்றனர். (25)

வேறு சிலர் (உட்கரணத்தை யடக்குதலாகிய) "ஸம்யமம்" என்ற தீயில் செவி முதலிய இந்திரியங்களை ஆஹுதி செய்கிறார்கள். வேறு சிலர் இந்திரியங்களாகிய தீக்களில் ஒலி முதலிய விஷயங்களை ஹோமிக்கிறார்கள். (26)

வேறு சிலர் ஞானத்தால் கொளுத்தப் பட்ட தன்னடக்க மென்ற யோகத் தீயில் எல்லா இந்திரியச் செயல்களையும், உயிர்ச் செயல்களையும் ஹோமம் பண்ணுகிறார்கள். (27)

விரதங்களை நன்கு பாதுகாக்கும் முனிகளில் வேறு சிலர் திரவியத்தால் வேள்வி செய்வோர்; சிலர் தவத்தால் வேட்போர்; சிலர் யோகத்தால் வேட்போர்; சிலர் கல்வியால் வேட்போர்; சிலர் ஞானத்தால் வேட்போர். (28)

இனி வேறு சிலர் ப்ராணாயாமத்தில் ஈடு பட்டவர்களாய், ப்ராணன், அபானன் என்ற வாயுக்களின் நடையைக் கட்டுப் படுத்தி அபான வாயுவில் ×
ப்ராண வாயுவையும்.) ப்ராண வாயுவில் அபானத்தையும் ஆஹுதி பண்ணுகிறார்கள். (29)

வேறு சிலர் உணவை ஒடுக்கிப் படுத்தி உயிரை உயிரில் ஆஹுதி செய்கிறார்கள். இவ் வனைவரும் வேள்வி நெறி யுணர்ந்து வேள்வியால் பாவ மற்றுப் போயினோர். (30)

வேள்வியால் மிஞ்சிய அமுதை யுண்போர் என்று முள்ள தாகிய பிரம்மத்தை யெய்துகிறார்கள். வேள்வி செய்யாதோர்க்கு இவ் வுலக மில்லை. அவர்களுக்குப் பர லோக மேது, குருகுலத்தாரில் சிறந்தோய்? (31)

பிரம்மத்தின் முகத்தில் இவ்வண்ணம் பல விதமான வேள்விகள் விரித்துக் காட்டப் பட்டிருக்கின்றன. அவை யெல்லாம் தொழிலாலே பிறப்பன வென்றுணர். இவ் வா றுணர்ந்தால் விடுதலை பெறுவாய். (32)

பரந்தபா, திரவியத்தைக் கொண்டு செய்யப் படும் வேள்வியைக் காட்டிலும் ஞான வேள்வி சிறந்தது. பார்த்தா, கர்ம மெல்லாம், முற்றிலும், ஞானத்தில் முடிவு பெறுகிறது. (33)

அதனை வணக்கத்தாலும், சுற்றுக் கேள்வியாலும், தொண்டு புரிதலாலும் அறிந்து கொள். உண்மை காணும் ஞானிகள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள். (34)

அந்த ஞானம் பெறுவதனால், பாண்டவா, நீ அப்பால் இவ் வாறு மயக்க மெய்த மாட்டாய். இதனால் நீ எல்லா உயிர்களையும், மிச்ச மின்றி, நின் னுள்ளே காண்பாய். அப்பால் அவற்றை என் னுள்ளே காண்பாய். (35)

பாவிகளெல்லாரைக் காட்டிலும் நீ அதிகப் பாவியாக இருந்தாலும், அப் பாவத்தை யெல்லாம் ஞானத் தோணியால் கடந்து செல்வாய். (36)

நன்கு கொழுந் துண்ட தீ விறகுகளைச் சாம்ப ராக்கி விடுதல் போலவே அர்ஜுனா, ஞானத் தீ எல்லா வினைகளையும் சாம்ப ராக்கி விடும். (37)

ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ் வுலகத்தில் வேறொன்று மில்லை. யோகத்தில் நல்ல ஸித்தி யடைந்தவன் தானாகவே தக்க பருவத்தில் அதைத் தனக் குள் கண்டு பெறுகிறான். (38)

சிரத்தை யுடையோன் பரத்தைப் பர மாகக் கொண்டு, இந்திரியங்களைக் கட்டுப் படுத்தியவனாய், ~~சிரத்தை யுடையோன்~~ ஞானத்தை யடைகிறான். ஞானத்தை யடைந்த பின் விரைவிலே பர சாந்தி பெறுகிறான். (39)

அறிவும் சிரத்தையு மின்றி ஐயத்தை இயல் பாகக் கொண்டோன் அழிந்து போகிறான். ஐய முடையோனுக்கு இவ் வுலகு மில்லை; மே லுலகு மில்லை; இன்பமு மில்லை. (40)

யோகத்தால் செய்கைகளைத் துறந்து, ஞானத்தால் ஐயத்தை அறுத்துத் தன்னைத் தானாண்டவனை, தனஞ்ஜயா, கர்மங்கள் கட்டுப் படுத்த மாட்டா. (41)

அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலை கொண் டிருக்கும் இந்த ஐயத்தைத் தன் ஞான வாளால் அறுத்து யோக நிலை கொள். பாரதா, எழுந்து நில். (42)

இப்படி உபநிஷத்தும் பிரமவித்தையும் யோக சாஸ்திரமும்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில்
"ஞான யோகம்" என்ற 4-ஆம் அத்தியாயம் முற்றிற்று

## ஐந்தாம் அத்யாயம் —

## ஸந்யாஸ யோகம்

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

கண்ணா, செய்கைகளின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய்; மற்றோர் முறையுடன் யோகத்தைப் புகழ்கிறாய். இவ் விரண்டில் எது நன்றென்று தெரிந்து தெளிவுடை நன்கு நிச்சயம் பண்ணி எனக்குச் சொல். (1)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—

துறவு, கர்மயோகம், இவ் விரண்டும் உயர்ந்த நலத்தைத் தருவன. இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேம்பட்டது. (2)

பகைத்தலும் விரும்புதலு மில்லாதவனை நித்ய ஸந்யாஸி யென் றுணர்வாய். பெருந் தோளுடையாய், இருமைகளற்ற அவன் எளிதில் பந்தத்தினின்று விடுபடுகிறான். (3)

X. ஸாங்க்யத்தையும் யோகத்தையும் வெவ்வேறென்று சொல்வோர் குழந்தைகள். பண்டிதர் அங்ஙனம் கூறார். இவற்றுள் ஏதேனும் ஒன்றில் நன்கு நிலை பெற்றோன் இரண்டின் பயனையும் எய்துகிறான். (4)

ஸாங்க்யர் பெறும் நிலையையே யோகிகளும் பெறுகிறார்கள். ~~[illegible]~~ ~~[illegible]~~, ஸாங்க்யத்தையும் யோகத்தையும் ஒன்றெனக் காண்பானே, அவனே காட்சி யுடையான். (5)

பெருந் தோளாய், யோக மில்லாத ஸந்யாஸம் பெறுதல் கஷ்டம். யோகத்தில் பொருந்திய முனி விரைவில் ப்ரம்மத்தை அடைகிறான் (6)

யோகத்திலே மருவித் தூய்மை பூண்டோன், தன்னைத் தான் வென்றோன், இந்திரியங்களின் மீது வெற்றி கொண்டோன், எல்லா உயிர்க்கும் தானே யானவன்—அவன் தொழில் செய்து கொண் டிருப்பினும் அதில் ஒட்டுவதில்லை. (7)

உண்மை யறிந்த யோகி: "நான் எதையுஞ் செய்வதில்லை"—என் றெண்ணக் கடவான். காண்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், உண்ணினும், நடப்பினும், உயிர்ப்பினும், உறங்கினும், (8)

புலம்பினும், விடினும், பற்றினும், இமைகளைத் திறப்பினும், மூடினும்—இந்திரியங்கள் தம் முடைய விஷயங்களில் சலிக்கின்றன" என்று கருதி யிருக்கக் கடவான். (9)

செய்கைக ளெல்லாம் ப்ரம்மத்தில் சார்த்தி பற்றுதல் நீக்கி எவன் தொழில் செய்கிறானோ, அவன் நீரில் ~~[illegible]~~ தாமரை யிலை போல், பாவத்தால் தீண்டப் படுவதில்லை. (10)

யோகிகள் பற்றுதலைக் களைந்து, ஆத்ம சுத்தியின் பொருட்டாக உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும், அன்றி வெறுமே இந்திரியங்களாலும் தொழில் செய்வார். (11)

யோகத்தில் பொருந்தியவன் கர்மப் பயனைத் துறந்து நிஷ்டையின் தேய சாந்தியை அடைகிறான். யோகத்தில் இணைக்காதோன் அவேசத்தினால் வசமாய்ப் பயனிலே பற்றுதல் கொண்டு தளைப் படுகிறான். (12)

தன் வசங் கொண்ட ஆத்மா எல்லாக் கர்மங்களையும் மனதால் துறந்து எதையும் செய்வது மின்றிச் செய்விப்பது மின்றி, ஒன்பது வாயில் கொண்ட ~~[illegible]~~ உடற் கோட்டையில் இன்புற்றிருக்கிறான். (13)

செய்கைத் தலைமை; செய்கை; செய்கைப் பயன் பெறுதல்; இவற்று ளொன்றையும் கடவுள் மனிதருக்குத் தரவில்லை. இயற்கையே இயல் பெறுகிறது. (14)

எவனுடைய ~~[illegible]~~ பாவம் அல்லது நற்செய்கை யுடையோனென்று கடவுள் ஏற்பதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் மூடப் பட்டிருக்கிறது. அதனால் ஜந்துக்கள் மயக்க மெய்துகின்றனர். (15)

அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால் அழித்துவிட்ட ஜனங்களுடைய ஞானம் சூரியனைப் போன்று தாய்ப் பரம் பொருளை ஒளி யுறக் காட்டுகிறது. (16)

ப்ரமத்தில் புத்தியை நாட்டி, அதுவே தானாய், அதில் நிஷ்டை யெய்தி, அதில் ஈடுபட்டோர் ஞானமுடைய பாவங்களெல்லாம் நீங்கிக் கழுவப் பெற்றோராய், மீளாப் பத மடைகிறார்கள். (17)

கல்வியும், விநயமும் நின்று ஒத்த ப்ராமணனிடத்திலும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனிடத்தும் பண்டிதர் சமப் பார்வை யுடையோர். (18)

மனம் சமநிலையில் நிற்கப் பெற்றோர் இவ் வுலகத்திலேயே இயற்கையை வென்றோராவர். ப்ரமம் ~~[illegible]~~ மாசற்றது சம நிலை யுற்றது. ஆதலால் அவர்கள் ப்ரமத்தில் நிலை பெறுகிறார்கள். (19)

~~புத்தி நிலைத்துவிட்டவனே பற்றுதல் கொள்ளாமல் [illegible] காண்போன், ப்ரம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை அடைகிறான். (20) வெளித் தீண்டுதல்களிலே சேராமல் [illegible] தன்னுடைய [illegible] ஆத்மாவில் [illegible]~~

விரும்பிய பொருளைப் பெறும் போது களி கொள்ளான்; ~~[illegible]~~ ப்ரிய மற்றதைப் பெறும் போது துயரப் படமாட்டான். ப்ரமஞானி ஸ்திர புத்தி யுடையோனாய், மயக்கம் நீங்கி, ப்ரமத்தில் நிலை பெறுவோன். (20)

புறத் தீண்டுதல்களில் பற்றுதல் ஒழிந்தவன் தானே இன்பத்தைக் காண்கிறான்
பிரம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை எய்துகிறான். (21)

புறத் தீண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத்துக்குக் காரணங்களாம். அவை
தொடக்கமும் இறுதியு முடையன. குந்தி மகனே, அறிவுடையோன் அவற்றில்
களி யுறுவதில்லை. (22)

சரீரம் நீங்கு முன்னர் இவ் வுலகத்திலே யே காமத்தாலும் சினத்தாலும்
வரும் வேகத்தை எவன் பொறுக்க வல்லானோ அவன் மனிதன் யோகி,
அவன் இன்ப முடையோன். (23)

தானே உள்ளே இன்ப முடையவனும், உள்ளே மகிழ்ச்சி காண்பவனும்,
உள்ளே ஒளி பெற்றவனுமாகிய யோகி தானே பிரமமாய், பிரமநிர்வாணம்
அடைகிறான். (24)

X இருமைகளை வெட்டித் தம்மைத் தாம் கட்டுப் படுத்தி எல்லா
உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சி யெய்தும் ரிஷிகள் பாவங்கள் தொலைந்து
பிரம நிர்வாண மடைகிறார்கள். (25)

காமமும், சினமும் தவிர்த்து சித்தத்தைக் கட்டுப் படுத்தி, ~~[illegible]~~
~~[illegible]~~, ஆத்ம ஞானிகளாகிய முனிவர்க்கு பிரமநிர்வாணம்
அருகே யுள்ளது. (26)

புறத் தீண்டுதல்களை அகற்றிப் புருவங்களின் நடுவே பார்வையை நிறுத்தி
மூக்கி னுள்ளே இயங்கும் பிரா[illegible]வையும் அபானவாயுவையும் சமமாகச்
செய்து கொண்டு; (27)

புலன்களையும், மனத்தையும், மதியையும் கட்டி
விடுதலையே பரம் எனக் கொண்டு
விருப்பமும் அச்சமும் சினமும் தவிர்த்தான்,
முத்தனே யாவான் முனி. (28)

வேள்வியுந் தவமும் †நுகர்வோன் யானே;
உலகுகட் கெல்லாம் ஒரு பேரரசன்;
எல்லா உயிர்கட்கு நண்பன் — யானென
அறிவான் அமைதி யறிவான். (29)

இங்ஙனம் உபநிஷத்தும் பிரமவித்தையும் யோகசாஸ்திரமும்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையால்
"ஸந்நியாஸ யோகம்" என்ற ஐந் தாம் அத்யாயம் முற்றிற்று.

---

X இருமைகள்: நன்மை, தீமை; குளிர், சூடு; இன்பம், துன்பம்; என
எதிர்ப் பொருள்களையும் பற்றி நிற்கும் வேற்றுமைகள்.

† நுகர்தல் = உண்பது.

# ஆறாம் அத்தியாயம்

## அத்யாத்ம யோகம்

கடவுள் சொல்லுகிறான்:—

செய்கையின் பயனில் சார்பின்றிச் செய்யத் தக்கது செய்வோன் துறவி. அவனே யோகி. தீ வளர்க்காதவனும் கிரியை செய்யாதவனும் அவனாகான். (1)

பாண்டவா, எதனை ஸந்நியாச மென்றுரைக்கிறார்களோ, அதுவே யோக மென்றறி. தன் கோட்பாடுகளைத் துறக்காத எவனும் யோகியாக மாட்டான். (2)

யோக நிலையில் ஏற விரும்பும் யோகிக்குத் தொழிலே கருவியாகக் கூறப் படுகிறது. அந்நிலையில் ஏறிய பின் அவனுக்கு ~~[illegible]~~ சாந்தம் கருவி யாகிறது. (3)

ஒருவன் எல்லாக் கோட்பாடுகளையுந் துறந்து புலன்களிலேனும் செயல்களிலேனும் பற்றுதலின்றி யிருப்பானாயின், அப்போதவன் "யோக நிலையில் ஏறியவன்" என்று சொல்லப் படுகிறான் (4)

தன்னைத் தான் உயர்த்திக் கொள்க. தன்னைத் தான் கீழ்ப்படுத்தல் வேண்டா. தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன். (5)

தன்னைத் தான் வென்றவனே தனக்குத் தான் நண்பன்;
தன்னைத் தான் வெல்லாதான் தனக்குத் தான் பகைவன் போலக்
கேடு சூழ்கிறான். (6)

தன்னை வென்று அமைதி யெய்தியவனுடைய ஆத்மா ~~[illegible]~~ சீதோஷ்ணங்களிலும் சுக துக்கங்களிலும் மானாவமானங்களிலும் சம நிலை பெற்ற பரமாத்மா வாகிறது. (7)

† ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் திருப்தி யடைந்தவனாய், கூடஸ்தனாய் நிற்பான், புலன்களை வென்று, மண்ணையும் கல்லையும் பொன்னையும் ஒன்று போலே காணும் யோகியே / "யோக நிலையுற்றான்" எனப் படுவான். (8)

அன்பர், நட்டோர், பகைவர், ஏதிலர், நடுவர், எதிரிகள், சுற்றத்தார், நல்லோர், தீயோர், எல்லோரிடத்தும் சம புத்தி யுடையோன் மேலோனாவான். (9)

மறைவிடத்தில் இருந்து கொண்டு, தனியனாய், உள்ளத்தைக் கட்டி, ஆசையைத் துறந்து, எப்போதும் நிலைபெற்று ஆத்மாவில் யோக முறக் கடவான். -10-

---

† ஞானமென்பது கடவுளறிவைப் பற்றிய அறிவு.
விஞ்ஞான மென்பது உலகவறிவைப் பற்றியது.

[illegible]
[illegible]
[illegible] (11)
[illegible]
[illegible]
[illegible] (12)
[illegible]
[illegible]
[illegible] (13)
[illegible]
[illegible]
[illegible] (14)
[illegible]
[illegible]
[illegible] (15)
[illegible]
[illegible]
[illegible] (16)
[illegible]
[illegible]
[illegible] (17)
[illegible]
[illegible] (18)
[illegible]
[illegible]
[illegible] (19)
[illegible]
[illegible]
[illegible] (20)
[illegible]
[illegible]
[illegible] (21)
[illegible]
[illegible] (22)
[illegible]

(This page continues on the next leaf)
see next leaf

[illegible] (23)

X [illegible] (24)

[illegible] (25)

---

X. [illegible]

(Continued in the second note-book which begins with page 26

எங்கெங்கே மனம் சஞ்சலமாய் உறுதியின்றி உழலுகிறதோ, அங்கங்கே அதனைக் கட்டுப் படுத்தி ஆத்மாவுக்கு வசமாக்கிக் கொள்க. (26)

மனம் சாந்தமாய், ரஜோ குணம் ஆறி, பாவ நீங்கிப் பிரமமே யாகிய இந்த யோகிக்கு மிகச் சிறந்த இன்பம் கிடைக்கிறது. (27)

இத்தகைப் போக்கில் இங்ஙனம் எப்போதும் ஆத்மாவை ~~[illegible]~~ கலப்பித்து இருப்பானாயவன், அந்த யோகி ப்ரஹ்மத்தைத் தொடுவதாகிய மிக உயர்ந்த இன்பத்தை எளிதில் துய்க்கிறான். (28)

யோகத்தில் கலந்தவன் எங்கும் ஸமப் பார்வை யுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும் தன்னுள் எல்லா உயிர்களு மிருப்பதையும் காணுகிறான். (29)

எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறானோ, அவனுக்கு நான் அழிய மாட்டேன்; எனக் கவன் அழிய மாட்டான். (30)

ஒருமையில் நிலை கொண்டவனாய், எல்லா உயிர்களினிடத்துமுள்ள என்னைத் தொழுவோன் யாங்கனும் சென்று போகினும், அந்த யோகி என்னுள்ளேயே இயலுகிறான். (31)

இன்பமாயினும், துன்பமாயினும், எதிலும் ஆத்ம-ஸமத்வம் பற்றி ஸமப் பார்வை செலுத்துவானாயின், அவன் பரம யோகியாகக் கருதப் படுவான். (32)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

மதுஸூதனா, இங்ஙனம் நீ ஸமத்வத்தால் ஏற்படுவதாகச் சொல்லிய யோகம் ஸ்திரமான நிலையுடையதாக எனக்குத் தோன்றவில்லை; மனது சஞ்சலத் தன்மையால். (33)

கண்ணா, மனம் சஞ்சல முடையது; கலக்கு மியல்பினது; வலிது; உறுதியுடையது அதைக் கட்டுப் படுத்துதல் காற்றைக் கட்டுவது போல் அரும் கஷ்டமான செய்கை யென்று நான் மதிக்கிறேன். (34)

கடவுள் சொல்லுகிறான்:—

பெருந் தோளாய், மனம் கட்டுதற் கரி~~[illegible]~~துதான்; சலன முடையது தான்; ஐயமில்லை. ஆனால், குந்தியின் மகனே, அதை வழக்கத்தாலும், பற்றின்மையாலும் கட்டி விடலாம். (35)

தன்னைக் கட்டாதவன் யோக மெய்துதல் அரிதென்று நான் கருதுகிறேன். தன்னைக் கட்டியவன் முயற்சியாலும் உபாயத்தாலும் அதனை எய்த வல்லான். (36)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

சிரத்தை யுடையோனாயினும், தன்னைக் கட்டாமையால் யோகத்தினின்றும் மனம் வழுவியவன் யோகத்தில் தோற்றுப் போய், அப்பால் என்ன கதி யடைகிறான், கண்ணா? (37)

ஒரு வேளை அவன் இரண்டிலுங் கெட்டவனாய், உடைந்த மேகம் போல் அழிகிறானோ? வெருண்டோனாய், உறுதி யற்றவனாய், பிரம நெறியிலே மயக்க மெய்திய மகன் யாதாகிறான்? (38)

கண்ணா, எனக் குள்ள இந்த ஐயத்தை நீ அறுத்து விடுக. நின்னை யன்றி இந்த ஐயத்தை யறுப்போர் வேறெவரு மிலர். (39)

கடவுள் சொல்லுகிறான்:—

பார்த்தா, அவனுக்கு இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் அழிவில்லை; மகனே, நன்மை செய்வோன் எவனும் கெட்ட கதி யடைய மாட்டான் (40)

யோகத்தில் தவறியவன் புண்ணியஞ் செய்வோரின் உலகங்களை யெய்தி அங்கு கணக்கில்லாத வருஷங்கள் வாழ்ந்து தூய்மை யுடைய செல்வர்களின் வீட்டில் பிறக்கிறான். (41)

அல்லது, புத்திமான்க ளாகிய யோகிகளின் குலத்திலேயே பிறக்கிறான். இவ் வுலகில் இது போன்ற பிறவி யெய்துதல் மிகவும் அரிது. (42)

அங்கே அவன் பூர்வ சரீரத்துடைய புத்தியைப் பெறுகிறான். குருநந்தனா, அப்பால் அவன் மறுபடியும் வெற்றிக்கு முயற்சி செய்கிறான். (43)

முன்னைப் பழக்கத்தால் அவன் தன் வசமின்றியும் இழுக்கப் படுகிறான். யோகத்தை அறிய வேண்டுமென்று விருப்புற்றாலேயே ஒருவன் வேத வுலகத்தைக் கடந்து செல்லுகிறான். (44)

பாவம் நீங்கியவனாய், ஊன்றி முயல்வானே யாயின், யோகி பல பிறவிகளின் தேர்ந்த வெற்றியாகிய பரகதியை அப்போ தடைகிறான். (45)

தவஞ் செய்வோரைக் காட்டிலும் யோகி சிறந்தோன். ஞானிகளிலும் அவன் சிறந்தோனாகக் கருதப் படுகிறான். கர்மிகளிலும் அவன் சிறந்தோன். ஆதலால், அர்ஜுனா, யோகி யாகுக. (46)

மற் றெந்த யோகிகளெல்லாரினும் எவனொருவன் அந்தராத்மாவால் என்னைப் புகுந்து என்னைச் சிரத்தையுடன் போற்றுகிறானோ, அவன் மிக மேலான யோகி யென்பது என்னுடைய கொள்கை. (47)

இங்ஙனம், உபநிஷத்தும் பிரமவித்தையும் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதமுமாகிய பகவத்கீதையில் "அத்யாத்ம யோகம்" என்ற ஆறாம் அத்யாயம் முற்றிற்று.

## ஏழாம் அத்யாயம்

## ஞான யோகம்.

கடவுள் சொல்லுகிறான்:-

பார்த்தா, என் பா லிசைந்த மனத்தினாய், என்னைச் சார்ந்து, யோகத்திலே அமர்ந்தாயாய், என்னை முழுதும் உணரு மாறு சொல்லக் கேளாய். (1)

ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் ஸம்பூர்ணமாக உனக்குச் சொல்லுகிறேன். இதை அறிந்தால் பிறகு நீ அறிய வேண்டியது மிச்ச மொன்றுமில்லை. (2)

பல்லாயிர மனிதரில் ஒருவன் ஸித்தி பெற முயல்கிறான். முயற்சியுடைய ஸித்தர் பலரில் ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான். (3)

மண், நீர், தீ, காற்று, வான், மனம், மதி, அஹங்காரம்,* இவ் வெட்டு வகையாக என் இயற்கை பிரிந்து தோன்றுகிறது. (4)

இஃது என் கீழியற்கை. இதனின்றும் வேறுபட்டதாகிய என் மேலியற்கையை அ[illegible]லே உயிராவதும் பெருந்தோளாய், அதனால் இவ் வுலகு தாங்கப் படுகிறது. (5)

எல்லா உயிர்களுக்கும் அது காரண மென் றுணர். அதனால் நான் உலக முழுமைக்கும் ஆக்கமும் அழிவு மாவேன். (6)

தனஞ்ஜயா, என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவு மில்லை. நூலில் மணிகளைப் போல் இவ் வையக மெல்லாம் என் மீது கோக்கப் பட்டது. (7)

நான் நீரில் சுவை, குந்தி மகனே, நான் ஞாயிற்றிலும் திங்களிலு மொளி. எல்லா வேதங்களிலும் நான் பிரணவம். வானில் ஒலி நான்; ஆண் மக்களிடத்து நான் ஆண்மை. (8)

மண்ணில் தூய நாற்றமும், தீயில் சுடரும் யான். எல்லா உயிரிலும் உயிர்ப்பு நான்; தவஞ் செய்வோரின் தவம் யான். (9)

எல்லா உயிர்களுக்கும் நான் ஸநாதநமாகிய விதை யென் றுணர். பார்த்தா, புத்தி யுடையோரின் புத்தி நான். ஒளி யுடையோரின் ஒளி நான். (10)

வல்லோ ரிடத்திலே விருப்பமும் விழைவுந் தீர்ந்த வலிமை நான். பரத ரேறே உயிரிடத்து நான் கடமை தவறாத விருப்ப மாவேன். (11)

---

*அஹங்காரம் = எல்லாச் சேதன உயிர்களுக்கு முள்ள "நான்" என்ற கொள்கை.

சத்வ, ரஜஸ், தமோ குணங்களைச் சார்ந்த மன நிலைகள் எல்லாம்
என் னிடத்தே பிறந்தன. அவை என் னுள் இருக்கின்றன. நான்
அவற் றுள் இல்லை. (12)

இந்த மூன்று குணங்களா லாகிய எண்ணங்களால் [உலகத்தா ரெல்லாரும்] மயங்கிப் போய்
~~உலகத்தா ரெல்லாரும்~~ இவற்றினும் மேலாய் அழியாத இயல்பு (13)
கொண்ட என்னை உணரா திருக்கிறது.

இந்த, குண மய மாகிய, எனது தேவ மாயை கடத்தற் கரிது.
என்னையே யாவர் சரணடைவாரோ, அவர்கள் இந்த மாயையைக் (14)
கடக்கின்றனர்.

தீமை செய்யும் மூடர், மனிதரில் கடைப்பட்டார், மாயையால் ஞான
ஞான மழிந்தோர், அசுரத் தன்மையைப் பற்றி நிற்போர், (15)
போர்) என்னைச் சரண் புகார்.

நற் செய்கை யுடைய மக்களில் நான்கு வகையார் என்னை வழிபடு
கின்றனர்: பரத ரேறே, துன்புற்றோர்; அறிவை விரும்புவோர்; பயனை (16)
வேண்டுவோர்; ஞானிகள் என.

அவர்களில் நித்ய யோகம் பூண்டு ஒரே பக்தி செலுத்தும் ஞானி
சிறந்தவன். ஞானிக்கு நான் மிகவும் இனியவன்; அவன் எனக்கு (17)
மிகவும் இனியான்.

மேற் சொல்லிய யாவரும் உயர்ந்தோரே. எனில், ஞானியை நான்
யாகவே கொண்டேன். அவன் யோகத்தில் இசைந்து உத்தம (18)
கதி யாகிய என்னைக் கடைப்பிடித்து நிற்கிறான்.

பல பிறவிகளின் இறுதியில் ஞானவான்: "எல்லாம் வாஸுதேவனே"
என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான். அவ் வாறு (19)
மஹாத்மா கிடைத்தற் கரியவன்.

பல் வேறு விருப்பங்களால் கவரப் பட்ட அறி[struck]வுடை
யோர் தத்தம் இயற்கையால் கட்டுண்டு, பல் வேறு நியமங்களில் (20) ~~20~~
நிற்பாராய் அன்ய தேவதைகளை வழிபடுகின்றனர்.

எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை
அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத நம்பிக்கையை (21)
அந்த வடிவத்தில் நான் பெருக்குகின்றேன்.

அவன் அந்த நம்பிக்கையுடன் கூடி அவ் வடிவத்தை ~~(struck)~~
ஆராதிக்க வேண்டுகிறான். அதினின்றும் தான் விரும்பிய
வற்றை எய்துகிறான்; எனினும் அவற்றை வகுத்துக் கொடுப்போன்
யானே.

(22)

எனினும், அற்ப மதி யுடைய அன்னோர் செய்யும் பயன் இறுதி யுடைத்தாம். தேவர்களைத் தொழுவோர் தேவர்களை எய்துகின்றனர். என் அடியார் என்னையே எய்துகிறார்கள். (23)

மறைவும் வெளிப்பாடும் உடையோனாக என்னை மதியற்றோர் கருதுகின்றனர். என் அழிவற்ற, உயர்ந்ததாகிய பர நிலையை அன்னோர் அறிகிலர் (24)

எல்லாவற்றுக்கும் ஒளி யாகிய என்னை யோகமாயை சூழ்ந்து நிற்கும். பிறப்பிலி, கேடற்ற என்னை மூட உலகம் அறிய வில்லை. (25)

சென்றன, நிகழ்வன, வருவன ஆகிய உயிர்களை யெல்லாம் யானறிவேன். என்னை யறிந்தோர் எவரு மிலர். (26)

விருப்பத்தாலும் பகைமையாலும் தோன்றும் ~~[illegible]~~ இருமைகளின் மயக்கத்தால், பாரதா, எல்லா உயிர்களும் மயங்கி விடுகின்றன; பகைவரைச் சுடுவோய். (27)

எந்த நல்லோர் பாவம் தீர்ந்து புண்ணியச் செயல்கள் செய்கின்றனரோ, அவர்கள் ~~[illegible]~~ இருமைகளின் மயக்கம் தீர்ந்து திடவ்ரத முடையோராய் என்னை வழிபடுகின்றனர். (28)

மூப்பு சாவினின்றும் விடுதலை பெற நாடி என்னை வழிபட்டு முயற்சி செய்வோர் "அது" என்ற பிரமத்தை யுணர்வார்; அத்யாத்மத்தை முழுதையும் உணர்வார்; கர்மத்தை முழுதையு முணர்வார். (29)

பூதாதிபம், தேவாதிபம், யாகாதிபம் இவற்றுடன் என்னை யார் இறுதிக் காலத்திலேனும் அறிவாரோ, யோகத்திற் பொருந்திய சித்த முடைய அன்னோரே அறிவார். (30)

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம வித்தையும், யோக சாஸ்திரமும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்பாஷணை யாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் "ஞான யோகம்" என்ற ஏழாம் அத்யாயம் முற்றும்.

## எட்டாம் அத்தியாயம்

## அக்ஷர ப்ரம்ம யோகம்

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

அந்த ப்ரமம் எது? ஆத்ம ஞானம் யாது? புருஷோத்தமா, கர்ம மென்பது யாது? பூத ஞானம் யாது? தேவ ஞானம் என்ப தெதனை? (1)

யாகஞானம் என்ப தென்னே? தம்மைத் தாம் கட்டுடையவர்களால் இறுதிக் காலத்தே னும் இவ் வுடலத்தில் நீ அறியப் படுவ தெங்ஙனே? (2)

கடவுள் சொல்லுகிறான்:—

அழிவற்ற பரம் பொருளே ப்ரமம். அதன் இயல்பை அறிதல் ஆத்ம ஞான மெனப் படும். உயிர்த் தன்மையை விளைவிக்கும் இயற்கை கர்ம மெனப் படுகிறது. (3)

அழிவு படும் இயற்கைகளைக் குறித்தது பூத ஞானம். புருஷனைப் பற்றியது தேவ ஞானம். உடம் பெடுத்தோரில் உயர்ந்தவனே, உடம்புக் குள் என்னை யறிதல் யாகஞானம். (4)

இறுதிக் காலத்தில் உடம்பைத் துறந்து என்னை நினைவுடன் ஏகிப் போவோன் என தியல்பை எய்துவான். இதில் ஐயமில்லை. (5)

எவன் முடிவில் எவ் வேறு தன்மையை நினைப்பவனாய் உடலைத் துறக்கிறனோ, அவன் எப்போதும் அத் தன்மையிலே ஈடு தலைப்படுவனாய் அதனை எய்துவான். (6)

ஆதலால், எல்லாக் காலங்களிலும் என்னை நினை. போர் செய். என்னிடத்தே மனத்தையும் புத்தியையும் அர்ப்பணம் செய்வதனால் என்னையே பெறுவாய். (7)

வேறிடஞ் செல்லாமே யோகம் பயிலும் சித்தத்துடன் சிந்தனை செய்து கொண்டு போவோன் தேவ ஒளிய பரமபுருஷனை அடைகிறான். (8)

கவியை, பழையோனை, ஆள்வோனை, அணுவைக் காட்டிலும் அணுவை, எல்லாவற்றையும் தரிப்பவனை, எண்ணுதற் கரிய வடிவுடையோனை, இருளுக் கப்பால் கதிரோன் நிறங் கொண் டவனை — எவன் நினைக்கிறானோ, (9)

இறுதிக் காலத்தில் அசைவற்ற மனத்துடன், புருவங்களின் நடுவே உயிரை நன்கு நிறுத்தி, பக்தியுடனும் யோக பலத்துடனும் எவன் நினைக் கிறனோ, — அவன் அந்தக் கடவுளாகிய பரம புருஷனை அடைகிறான். (10)

எந்த நிலையை வேத முணர்ந்தோர் அழிவற்ற தென்பர்; விருப்ப மற்ற முனிவர் எதனுட் புகுவார்; எதை விரும்பி ப்ரமசர்ய விரதம் காக்கப் படும்; — அந்த நிலையை உனக்குச் சுருக்க மாகச் சொல்லுகிறேன். (11)

எல்லா வாயில்களையும் தடுத்துக் கட்டி, மனதை உள்ளத்தில் நிறுத்தி, உயிரைத் தலையின் உச்சியில் நிலைப் படுத்தி (12)

யோக தாரணையில் ஊன்றி நின்று;

[illegible] (13)

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

[illegible] (20)

[illegible] (21)

[illegible] (22)

[illegible] (23)

[illegible] (24)

[illegible] (25)

[illegible] (26)

---

✳ [illegible]

இவ் வழிக ளிரண்டையும் உணர்ந்தால் அப்பால் யோகி மயக்க முறுவ திலன். ஆதலால், அர்ஜுனா, எப்போதும் யோகத்தில் கூடி நில். (27)

இதனை யறிவதால் யோகி வேதங்களிலும் வேள்விகளிலும் தவங்களி லும் தானங்களிலும் சுட்டிய புண்ணியப் பயனைக் கடந்து, ஆதி நிலை யாகிய பர நிலையை எய்துகிறான். (28)

இங்ஙனம் உபநிஷத்தும் பிரம வித்தையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத மாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில் அக்ஷர ப்ரஹ்ம யோகம் என்ற எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

## ஒன்பதாம் அத்யாயம்.

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:

91

## ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம்.

கடவுள் சொல்லுகிறான்:-

அஸூயை யற்றவ னாகிய உனக்கு இந்த அதி குஹ்யமான ஞானத்தை விஞ்ஞானத்துடன் சொல்லுகிறேன். இதை யறிவதால் தீமையை விட்டு விடுபடுவாய். (1)

ராஜவித்தை, ராஜ குஹ்யம், தூய்மை மிகுதியில் மேலானது; ~~[illegible]~~ கண்கூடாகத் தெரிவது; அறத்துக் கிசைந்தது; செய்தற்கு மிக எளிது. அழிவற்றது. (2)

இவ் வறத்தில் நம்பிக்கை யற்ற மனிதர் பரந்தபா, என்னை எய்தாமே மீட்டும் மிருத்யு ஸம்ஸாரப் பாதைகளில் மீளு கின்றனர். (3)

அவ்யக்த வடிவாய், நான் இவ் வுலக முழுமையும் சூழ்ந்திருக்கிறேன். என் னகத்தே பூதங்க ளெல்லாம் நிலை பெற்றன. அவற்றுள் பட்டதன்று என் நிலை. (4)

அன்றியும் ~~[illegible]~~ ஒரு வகையாற் பூதங்களும் என்னுள் நிற்பனவு மல்ல. என் ஈசுவர யோகத்தின் பெருமையை இங்கு பார். பூதங்களைத் தாங்கி நிற்பதும் பூதங்களைப் படைப்பது மாகிய என் ஆத்மா அவற்றுள் பட்டதன்று. (5)

எங்கும் இயங்குவதும் பெரியது மாகிய காற்று எப்படி எப்போதும் வானில் நிலை பெற்றிருக்கின்றதோ அப்படியே பூதங்க ளெல்லாம் என்னுள் நிலை பெற்றன வென்று தெரிந்து கொள். (6)

குந்தி மகனே, கற்ப நாசத்தில் எல்லா உயிர்களும் என் இயல்பை எய்துகின்றன. மறுபடி கற்பத் தொடக்கத்தில் நான் அவற்றைப் படைக்கிறேன். (7)

என் சக்தியால் உறுதி கொண்டு மீட்டு மீட்டும் இந்த பூதத் தொகுதி முழுமையும் என் வசமின்றி, சக்தி, அதாவது, இயற்கை

வசத்தால் நான் படைக்கின்றேன்.

தனஞ்ஜயா, என்னை அத்தொழில்கள் கட்டுப்படுத்தா. அவ் வினைகளிடையே நான் பற்றற்றவன் போல் அமர்ந்திருக்கின்றேன் (9)

என் மேற்பார்வையால் *சக்தி சராசர உலகங்களைப் பெறுகிறது. குந்தி மகனே, இந்த ஹேதுவால் உலகம் சுழல்கிறது. (10)

மானுஷ சரீரந் தாங்கிய என்னை மூடர் அவமதிக்கின்றனர். 'உயிர்க்கெல்லாம் ஈசன்' நான் என்ற என் பர நிலையை அவர்கள் அறிகிலர். (11)

வீணாசை யுடையோர், வீண் செயலாளர், வீணறிவாளர், அறிவிலோர், மயக்கத்தைத் தருவதான ராக்ஷஸ, அசுர, மோஹினி இயற்கைகளைச் சார்ந்து நிற்கின்றனர். [ராக்ஷஸ, அசுர, மோஹினி இயற்கை [illegible] அவா, கோபம், மயக்கம் என்ற மூன்று இயல்புகள்] (தேர்ப்பு) (12)

பார்த்தா, மஹாத்மாக்கள் தெய்வத இயல்பைச் சார்ந்து நின்று, பூத முதலாய்க் கேடற்றவனாகிய என்னை வேறு மனமின்றி வழிபடுகின்றனர். (13)

திட விரதத்துடன் முயற்சி புரிவோராய், எப்போதும் என்னைப் புகழ்வோராய், என்னை பக்தியால் வணங்குவோராய் நித்ய யோகத்தில் உபாசிக்கின்றனர். (14)

வேறு சிலர் ஞான வேள்வியால் வேட்பாராய், என்னை ஒருமையாகவும், பன்மையாகவும் பலவாறாக எல்லா [illegible] வழிபடுகின்றனர். (15)

நான் க்ரது; நான் யாகம்; நான் "ஸ்வதா" என்ற வாழ்த்து; நான் மருந்து; நான் மந்திரம்; நான் நெய்; நான் தீ; நான் அவி. (16)

இந்த உலகத்தின் அப்பன் நான். இதன் அம்மா நான். இதைத் தரிப்போன் நான். இதன் பாட்டன் நான். ~~இதை~~ அறியப்படுபொருள் நான். இதில் தூய்மை செய்வது நான். ஓங்காரம் நான்; நான் ரிக்; நான் ஸாமம்; நான் யஜுஸ். (17)

~~[illegible]~~ இவ்வுலகத்தின் புகல்; இதை நிர்வாகன்; இதன் கதி; இதன் [illegible]; இதன் சரண்; இதன் தோழன்; இதன் தொடக்கம்; (இதனிடம்) இதன் அழிவு; இதன் நிலை; இதன் அழியாத விதை. (18)

நான் வெப்பந் தருகிறேன்; மழையை நான் கட்டி விடுகிறேன்; நான் அதனைப் பெய்விக்கின்றேன். நானே அமிர்தம்; நானே மரணம். அர்ஜுனா, உள்ளதும் யான் இல்லதும் யான். (19)

* சக்தி, இயற்கை, ப்ரக்ருதி (Nature) என்று சொல்லும் ஒரே பொருள் [illegible]

93

சோமம் உண்டார்; பாவ மகன்றார்.
மூன்று வேத மந்திரத்தார்
என்னை வேள்விகளால் வேட்டு வானுலகு தர வேண்டினோர்
அவர்கள் புண்ணிய ஸ்தான மாகிய தேவேந்திர லோகத்தை
எய்தி, வானுலகில் திவ்ய மான தேவ போகங்களைத்
துய்க்கிறார்கள். (20)

விசால வாகிய வானுலகத்திலே,
இன்புற்றும் புண்ணியம் தீர்ந்த பின், மறுபடி அநித்ய
மனித உலகத்துக்குத் திரும்புகிறார்கள்.

இப்படி;
மூன்று வேத முறைத்தாரைத் தொழுவார்
ஆசைப்பற்றினில் வீழ்ந்தோர் உழல்வார். (21)

வேறு நினைப்பின்றி என்னை வழி படுவார்
யாவரோ; அந்த நித்ய யோகிகளின்
க்ஷேமம், யோகமதை நான் பொறுப்பேன். (22)

அன்ய தேவதைகளை சிரத்தையுடன் தொழும் அன்பரும்,
குந்தியின் மகனே, என்னையே தொழுகின்றனர்
விதி வழுவ. (23)

~~தேவ பத்தர்கள் தேவனை எய்துவார்;~~
~~பிதிர்க்களை தொழுவோர் பிதிர்க்களை அடைவார்;~~
~~பூதங்களைத் தொழுவோர் பூதங்களை அடைவார்;~~
~~என்னை வேட்போர் என்னை எய்துவார்.~~

நானே வேள்விகள் எல்லாவற்றுக்கும் உண்பவன்;
நானே தலைவன்.
என்னை மனிதர் உள்ள படி அறியார்
ஆதலால்; நழுவி வீழ்வார். (24)

தேவ பத்தர்கள் தேவனை எய்துவார்.
பிதிர்க்களைத் தொழுவார் பிதிர்க்களை அடைவார்.
பூதங்களைத் தொழுவார் பூதங்களை அடைவார்;. (25)
என்னை வேட்போர் என்னை எய்துவார்.

இலையேனும், பூவேனும், கனியேனும், நீரேனும்;
அன்புடனே எனக்கு அளிப்பான் ஆயின்; ~~[illegible]~~ சான்றுடன்
மெய்ப் புடையான் அன்னவன்
அளித்ததை உண்பேன் யான். (26)

நீ எது செய்யினும், எதனை நீ உண்ணினும்,
எதை நீ ஓமம் பண்ணினும்,
எதனைக் கொடுத்தாலும், எத்தவத்தைச் செய்தாலும்
குந்தி மகனே,
எனக்கு அர்ப்பண மென்று செய். (27)

இங்ஙனம் சுபங்களும், அசுபங்களுமாகிய,
பயன்களைத் தருவனவாகிய கர்மத் தளைகளினின்று [illegible] விடுபடு
வாய்.
துறவெனும் யோகத் திணைந்து
விடுதலை பெறுவாய், என்னையே பெறுவாய். (28)

நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன்.
எனக்குப் பகைவருமில்லை நண்பருமில்லை.
ஆனால் என்னை அன்புடன் தொழுவோர் —
அன்னவர் என்னகத் துள்ளார் [illegible] (29)
அவரகத்து நான் உளேன்.

மிகவும் தீயொழுக்க முடையோ னாயினும்
பிறிது வழிபாடின்றி என்னை வழிபடுவோன்
நல்லோ னென்றே கருதுக.
ஏனெனில், நன்கு முயல்கின்றான் அவன். (30)

அன்னவன் விரைவிலே அறவ [illegible] ஆவான்
நித்ய சாந்தியை யெய்துவான்.
குந்தி மகனே, தெளிந் தறி!
என் தொண்டன் சாக மாட்டான். (31)

பார்த்த, என்னைப் பணிவோ ராயினும்
மாதரேனும் வைசிய ரேனும்
சூத்திரரும் — பரகதி பெறுவார். (32)

அப்படி யிருக்கத் தூய்மை யார்ந்த
அந்தணரும் ராஜரிஷிகளும்
எனக் கன்ப ராயின் என்னே! கூறுவல்;
நிலையற்றதும் இன்ப மற்றது மாகிய
இவ் வுலகைப் பெற்ற வெய்திய நீ
என்னை வழிபடக் கடவாய். (33)

மனத்தை யெனக் காக்கி. பக்தி யெனக் காக்கு.
என்னைத் தொழுக. என்னைப் பணிக.
இங்ஙனம் முயற்றும் நீ ஒற்றுமைப்பட்டு யோகத்தால்
என்னையே எய்துவாய் (34)

இப்படி உபநிஷத்தும், பரமார்த்தமும், யோகசாஸ்திரமும்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமுமாகிய ராஜ வித்யா ராஜ
குஹ்ய யோகம் என்ற ஒன்பதாம் அத்யாயம்
முற்றிற்று

37
95

## பத்தாம் அத்தியாயம்.

## விபூதி யோகம்

பகவான் சொல்லுகிறான்:—

பெருந் தோளுடையாய், மீண்டு மேலாம் மொழி நான்
சொலப் புகும் மிகவுயர் சொல்லினைக் கேளாய்;
நீ யெனக் கினியவன்; ஆதலால், நினது நலம்
வேண்டி யான் கூறும் வசனமிதனைக் கேள். (1)

வானவர் கணங்க ளென் மஹிமையை உணரார்;
பெருந் தகை முனிவரு முணரார். யாங்கணும்,
வானோர் கட்கும் மஹரிஷி கட்கும்
ஆதி நானே. (2)

பிறப்ப தில்லான்; தொடக்க மிலாதான்;
உலகின் பெருமுதல்— என்றெனை யுணர்வோன்
மாநுட ருள்ளே மயக்கந் தீர்ந்தான்
பாவ மனைத்தினும் விடுதலைப் பட்டான். (3)

மதியும், ஞானமும், மயக்க மின்மையும்,
பொறுத்தலும், வாய்மையும், அடக்கமும், அமைதியும்,
இன்பமும், துன்பமும், உண்மையும், இன்மையும்
அச்சமும், அஞ்சாமையும்; (4)

துன்புறுத் தாமையும், நடுநிலையும், மகிழ்ச்சியும்
ஈகையும், தவமும், இகழும் புகழும்
இவ்வகை பல[illegible]ருமியல்புக ளெல்லாம்
என்னிடம் பெறுவன உயிர்கள். (5)

முன்னை மஹரிஷிகள் எழுவரும் நான்கு மநுக்களும் மனத்தால்
என் னியல் பெய்தினர். அவர்களுடைய ப்ரஜைகளே இம்
மக்க ளெல்லாரும். (6)

இத்தகைத் தாகும் எனது பெருமையும்
யோகத் தினையும் உள்ளவா றுணர்வோன்
அசைவிலா யோகத் தமர்வான். இதில் ஓர்
ஐய மில்லை. (7)

நான் அனைத்திற்கும் தொடக்கம்.
என்னிட மிருந்தே எல்லாம் இயலும்.
இவ்வண முணர்ந்து புலவர் என்னை
அன்புடன் தொழுவார். (8)

96 38

அத்தனை யென்பால் வைத்து;
உலகை யென்றுமே புரத்தி;
ஒருவரை யொருவர் உணர்ப்பா ராய்,
எக்காலத் தும்மகிழ் வோடிருந் தியம்புவார்;
அன்னோர் மகிழ்ச்சியும் இன்பமும் அடைவார். (9)

எப்போதும் யோகத் திருப்பா ராகி,
அன்புடன் எனை வழிபடும் அன்னோர்க்கு
யான் "புத்தி யோகம்" அளிப்பேன். இதனால்
எனை யவர் எய்துவார். (10)

அன்னவர்க் கிரங்கி யான் அவருடை அந்தராத்மாவில்
தோன்றி மருளைத் தொலைப்பேன்;
அன்னவ ராத்ம இருளை யா னொளி
ஒளி யுடை ஞான விளக்கால். (11)

அர்ஜுனன் சொல்லுகி றான்:—

நீயே பரம் பொருள், நீயே பர வீடு,
தூய்மை யனைத் [illegible] திறும் புனிதத் தூய்மை நீ.
நின்னையே "நித்ய புருஷ" னென்றும்,
ஆதி தேவ னென்றும் பிறப்பிலா னென்றும்,
இறைமைக் கடவு ளென்றும்; (12)

முனிவ ரெல்லாரு மொழிகிறார்; தேவரிஷி
நாரதரு மிவ்வணே நவில்கிறார்; அஸிதரும்
தேவலரும் வியாஸரும் அவ்வணமே செப்புகிறார்.
இங்கு நீயுமே யெனக் கதை யுரைக்கின்றாய். (13)

கேசவா நீயுரைக் கின்ற யனைத்தையும்
மெய்யெனக் கொள்வேன். பகவனே,
வானவரு மசுரரு நின் பராக்கிரமத்தை யறிவாரோ?
(14)

புருஷோத்தமா, உன்னை நீயே அறிவாய்.
பூதங்க ளாருயிர்! பூதத் தலைவனே,
தேவ தேவா! வையத் திறைவா! (15)

—அ. சிவா: சொல்

எந்த மகிமைகளால் நீ இவ் வுலகங்களைச் சூழ்ந்து நிற்கின்றாயோ, அந்த
நின் மகிமைகள் தெய்வத் தன்மை யுடையன. அவற்றை எனக்கு
மிச்ச மின்றி உரைத்தல் வேண்டுகிறேன். (16)

யோகி! எப்போதும் உன்னையே சிந்தித்து
நின்னை யுணரு மா றெங்ஙனே?
பகவனே! எவ் வெப் பொருள்களில் நின்னை யான்
கருதல் வேண்டும்? (17)

ஜநார்த்தந, நின் யோகத்தையும் பெருமையையும் விரித்து
மறு படி சொல்க. அமிர்தம் போன்ற நின் சொற்கள்
எனக்குத் தெவிட்ட வில்லை. (18)

கடவுள் சொல்லுகிறான்:—
அச்ச! என் தெய்வப் பெருமைகள் தெய்வத் தன்மை உடையன
வே. அவற்றுள் பிரதான மானவற்றை நினக்குச் சொல்லு
கிறேன்; எனது விஸ்தாரத்துக்கு முடி வில்லை. (19)

அர்ஜுநா,
உயிர்க ளனைத்தின் உள்ளே நிற்கும்
ஆத்மா நான். அவ் வுயிர்களின் ஆதி நான்.
இடையும் அவற்றின் இறுதியும் யானே. (20)

ஆதித்யர்களில் நான் விஷ்ணு;
ஒளிகளில் நான் கதிர் கான்ற ஞாயிறு;
காற்றுக்களில் மரீசி; நக்ஷத்ரங்களில் சந்திரன். (21)

வேதங்களில் யான் ஸாம வேதம்;
தேவரில் இந்திரன்; புலன்களில் மனம் யான்;
உயிர்க ளிடத்தே உணர்வு நான். (22)

ருத்ரர்களில் நான் சங்கரன்;
இயக்கர், அரக்கருள், யான் குபேரன்.
வசுக்களில் நான் தீ; மலைகளில் மேரு. (23)

பார்த்தா,
புரோகிதர்களில் நான் தலைவனாகிய ப்ருஹஸ்பதி யென்
றுணர். படைத் தலைவரில் நான் கந்தன். நீர் நிலைகளில் நான்
கடல். (24)

மகாரிஷிகளில் நான் ப்ருகு; வாக்குகளில் நான் "ஓம்";
யக்ஞங்களில் நான் ஜபயக்ஞம்; ஸ்தாவரங்களில் நான்
இமாலயம். (25)

மரங்க ளனைத்திலும் நான் அரச மரம்; தேவரிஷிகளில் நான் நாரதன்;
கந்தர்வ ருள்ளே நான் சித்ரரதன்; ஸித்தர்களில் கபில முனி. (26)

குதிரைகளிடையே நான் அமிர்தத்தில் பிறந்த உச்சைசிரவ
மென் றுணர். யானைகளில் ஐராவத மென்றும், மனிதரில்
அரச னென்றும் அறி. (27)

ஆயுதங்களில் நான் வஜ்ரம்; பசுக்களில் நான் காமதேனு.
பிறப்பிப்போரில் நான் மன்மதன்; பாம்புகளில் வாஸுகி. (28)

நாகங்களிடை நான் அநந்தன்; நீர் வாழ்வோரில் வருணன்;
பிதிர்க்களில் நான் அர்யமான்; தண்டனைக் கட்டுநர்களில் நான்
யமன். (29)

அசுரரில் ப்ரஹ்லாதன் யான்; இயல்பெறுவதில் காலம் யான்;
விலங்குகளில் சிங்கம்; பறவைகளில் கருடன். (30)

தூய்மை செய்வனவற்றுள்ளே காற்று நான்;
படை தாங்கியோரில் நான் ராமன்;
மீன்களில் நான் சுறா; ஆறுகளில் கங்கை. (31)

படைப்புக்களின் ஆதியும் அந்தமும் நான். அர்ஜுனா, வித்தை
களில் நான் அத்யாத்ம வித்தை. பேசுவோரிடையே நான்
பேச்சு. (32)

எழுத்துக்களில் நான் அகரம்; புணர்ப்புக்களில் இரட்டைப் புணர்ப்பு;
நான் அழிவற்ற காலம். எப் பாரிசத்தும் அமைப்போன் யானே.
(33)

எல்லாவற்றையும் அழிக்கும் மரணம் நான். எதிர் காலப்
பொருள்களின் பிறப்பு நான். பெண்க ளிடத்து நான் கீர்த்தி;
திரு; வாக்கு; நினைவு; மேதை; ஸ்திதி; பொறை. (34)

அங்ஙனமே ஸாமங்களில் நான் ப்ருஹத் ஸாமம்" என்ற
பெரிய ஸாமம். சந்தங்களில் நான் காயத்ரீ; மாதங்களில்
நான் மார்கழி; பருவங்களில் மலர் நிறை இளவேனில். (35)

வஞ்சகரின் சூது நான்; ஒளி யுடையோரின் ஒளி நான். நான்
வெற்றி; நான் நிச்சயம்; உண்மை யுடையோரின் உண்மை நான். (36)

வ்ருஷ்ணி குலத்தாரில் நான் வாஸுதேவன்; பாண்டவர்களில்
தனஞ்சயன்; முனிகளில் வியாஸன்; கவிகளில் உசநா கவி. (37)

ஆள்வோர் கையிலே கோல் நான்; வெற்றியை விரும்புவோர்
கையிலே நீதி நான். ரகசியங்களில் நான் மௌனம்; ஞான
முடையோர் கையிலே நான் ஞானம். (38)

எல்லா உயிர்களிலும் விதை எதுவோ அது நான்.
அர்ஜுனா, சராசரங்களில் என்னை யன்றி யுள்ள தொரு
பொருள் இல்லை. (39)

99 41

பார்த்தா, என் திவ்ய மஹிமைகளுக்கு முடிவில்லை. விஸ்தாரமான என் மஹிமைகளில் இதோ உத்தேசமாத்திரமே உனக்குரைத்தேன். (40)

எது எது பெருமையுடைத்து; உண்மையுடைத்து; அழகுடைத்து; வலிமையுடைத்து; அது வெல்லாம் என தொளியின் அம்சத்திற் பிறந்ததென்றுணர். (41)

அன்றி, இதைப் பல வாறாகத் தெரிவதில் உனக்குப் பயன் யாது? எனது கலை யொன்றினால் இவ் வையகத்தை நிறுத்தி யுள்ளேன்! (42)

இவ்வாறு உபநிஷத்தும் பிரமவித்தையும் யோகசாஸ்திரமுமாகிய ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமாகிய பகவத் கீதையில் "விபூதி யோகம்" என்ற பத்தாம் அத்யாயம் முற்றிற்று.

## பதினொன்றாம் அத்யாயம்.

## விசுவரூப தர்சனம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

என் மீது அருள் புரிந்து, எனக்கு இரகசிய, ஆத்ம ஞான மென்ற பரம ரஹஸ்யத்தை நீ எனக்குரைத்தது கேட்டு, என் மயக்கம் தீர்ந்து போயிற்று. (1)

உயிர்களின் தோற்றத்தையும் அழிவையும் பற்றி விரிவாகக் கேட்டேன், தாமரை யிதழ் போன்ற விழிகளுடையாய், நீ கேடற்ற பெருமையையும் கேட்டேன். (2)

பரமேசுவரா, புருஷோத்தமா, நின்னைப் பற்றி நீ எனக்குச் சொல்லிய படியே நின் ஈசுவர ரூபத்தைக் காண விரும்புகிறேன். (3)

இறைவனே, யோகேசுவரா, அதை நான் காணுதல் சாத்திய மென்று நீ கருதுவாயானால், எனக்கு நின் அழிவற்ற ஆத்மாவைக் காட்டுக. (4)

~~பகவான் சொல்லுகிறான்:—~~

~~பார்த்தா, என் வடிவங்கள் பல நூறுமாக~~

பார்த்தா,

~~பல நூறுகளும் பல்லாயிரங்களுமான~~

~~பல் வகை, பல நிறம், அமைப்புகளுடைய [illegible]~~

கடவுள் சொல்லுகிறான்:— 41 100 42

பல நூறு வகைகளும், பல்லாயிர வகைகளும்,
வகை பல; நிறம் பல; அமைப் பலவாகும்
என் திவ்ய ரூபங்களைப் பார்! பார்த்தா (5)

ஆதித்யர்களைப் பார்; வஸுக்களைப் பார்; அச்வினி தேவரைப் பார்; மருத்துக்களைப் பார்; பாரதா, இதற்கு முன் காணாதன பல ஆச்சர்யங்களைப் பார். (6)

அர்ஜுனா, இன்று, இங்கே, என் உடலில் சராசர மாய உலக முழுதும் ஒருங்கு நிற்பதைப் பார். இன்னும் வேறு நீ எதைக் காண விரும்பினும் அதை இங்கு காண். (7)

உன் னுடைய இயற்கை யான இக் கண்களால் என்னைப் பார்க்க முடியாது. உனக்கு ஞானக் கண் கொடுக்கிறேன். என்னுடைய ஈச்வர-யோகத்தைப் பார். (8)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:—

அரசனே, இவ் வாறு உரைத்து விட்டு, அப்பால் பெரிய யோகத் தலைவனாகிய ஹரி பார்த்தனுக்குத் தன் உயர்ந்த தெய்வ-வடிவைக் காட்டினான். (9)

(அவ்வடிவம்) பல வாய்களும் பல விழிகளு முடையது. பல அற்புதக் காட்சிக ளுடையது. பல திவ்யாபரணங்கள் பூண்டது. பல தெய்விகப் படைகள் ஏந்தியது. (10)

திவ்ய மாலைகளும் ஆடைகளும் புனைந்தது. திவ்ய கந்தங்கள் பூசியது. எல்லா வியப்புக்களும் வாய்ந்தது; எல்லையற்றது; எங்கும் முகங்க ளுடைய தேவ ரூபம். (11)

வானத்தில் ஒருங்கே ஆயிரம் ஸூர்யர்கள் எழுவாராயின், அங்கு தோன்றும் ஒளியை அந்த மஹாத்மாவின் ஒளிக்கு நிகராகக் கூறலாம். (12)

அங்கு பல பகுதிப் பட்டதாய், வையக முழுதும், அந்த தேவ தேவ னுடைய சரீரத்தில் ஒருங்கே சேர்ந்து நிற்பதை அப்போது பாண்டவன் கண்டான். (13)

அப்போது தனஞ்ஜயன் பெரு வியப் பெய்தி, மயிர் சிலிர்த்து, அக் கடவுளை முடியால் வணங்கிக் கைகளைக் கூப்பிக் கொண்டு சொல்லுகிறான்:— (14)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

தேவனே, நின் உடலில் எல்லா தேவர்களையும் காண்கிறேன். பூத வகைகளின் தொகுதிகளைக் காண்கிறேன். தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரமனையும் எல்லா ரிஷிகளையும்

*தேவ ஸர்ப்பங்களையும் கூடக் காண்கிறேன். (௫)

பல தோளும், பல வயிறும், பல வாயும், பல விழிகளு முடைய எல்லை
யற்ற வடிவமே நின்னை எங்கணும் காண்கிறேன். விச்வரூபத்தவே
ர! ஈசனே! எல்லாம் தன் வடிவாகக் கொண்டவனே, உனக்கு
முடிவேனும், இடையேனும், தொடக்க மேனும் காண்கிலேன். (16)

மகுடம் தண்டம் †~~சக்கரம்~~ வலயமுடைத் தரித்தாய்,
ஒளித் திரளாகி யாங்கணும் ஒளிர்வாய்,
தழல் படு தீயும் ஞாயிறும் போல
யாங்கணும் ~~[illegible]~~ உற்று நோக்கரிய காயாய்,
அளவற்ற காயாய், ~~[illegible]~~ ஆக நின்னைக் காண்கிறேன். (17)

அழிவிலாய்; அறிதற் குரிய பரத்தில்
மகத்து நிறைந்தாய்; ஜகத்தின் உயர் தனி
உறைவிடமாவாய்; கேடிலாய்; என்றும் நிலவும்
அறத்தினைக் காப்பாய்; "ஸநாதன புருஷன்"
நீ யெனக் கொண்டேன். (18)

ஆதியும் நடுவும் அந்தமு மில்லாய்,
வரம்பிலா வீரியம் கணக்கிலாத் தோளினை;
ஞாயிறுந் திங்களும் நயனமாக் கொண்டனை;
எரியுந் தழல் போல வாயுடை முகத்தினை;
ஒளியால் முழுமை புவனத்தையுந் தகிக்குவாய்;
இங்ஙனம் உன்னைக் காண்கிறேன். (19)

வானத்துக்கும் பூமிக்கும் நடுவே யுள்ள இடைவெளியும்,
எல்லாத் திசைகளும் நின்னால் நிரம்பித் திகழ்கின்றன. உன்னுடைய
அற்புதமும் உக்ரமு மான இவ் வடிவத்தைக் கண்டு மூன்
றுலகங்களும் சோர் வெய்துகின்றன. (20)

இந்த வானவர் கூட்ட மெல்லாம் நின் னுள்ளே புகுகின்றது.
சிலர் அச்ச மெய்தி நின்னைக் கைகூப்பிப் புகழ்கின்றனர்.
மஹரிஷிகளும் ஸித்தர்களு மாகிய கூட்டத்தார் நின்னை வணக்க
முடைய புகழுரைகள் சொல்லிப் புகழ்கின்றார். (21)

* ருத்ரர், ஆதித்யர், வஸுக்கள், ஸாத்யர், விச்வே தேவர்,
அச்வினி தேவர், மருத்துக்கள், உஷ்மபர், கந்தர்வர், யக்ஷர்,
அசுரர், ஸித்தர், இக் கூட்டத்தா ரெல்லோரும்

---

* இங்கு கூறப் படும் ருத்ரர் முதலாயினோர் தேவ வகுப்புக்க ளாவார்.
† வலயம் = சக்கரம்

நின்னை வியப்புடன் நோக்குகின்றனர். (22)

பெருந் தோளாய், பல வாய்களும், விழிகளும், பல கைகளும், பல கால்களும், பல வயிறுகளும், பல பயங்கர மான பற்களு முடைய நின் பெரு வடிவைக் கண்டு, உலகங்கள் நடுங்குகின்றன. யானும் அப்படியே. (23)

வானத்தைத் தீண்டுவது, ஒளிர்வது, பல வர்ணங்க ளுடையது,
திறந்த வாய்களும் கனல்கின்ற விழிக ளுடையது,
இங்ஙனம் நின் வடிவத்தைக் கண்டு,
விஷ்ணுவே, [redacted] எனக்கு நெஞ்சு சோர்ந்து பதைக்கிறது; யான் அமைதி காணவில்லை. (24)

அஞ்சத் தகும் பற்களுடைய பூதாகாரமாய் ஊழித் தீ போன்று நின் முகங்களைக் கண்ட அளவிலே, எனக்குத் திசைகள் தெரிய வில்லை; சாந்தி தோன்ற வில்லை. தேவர்களின் தலைவனே; வையகத்துக் குறை விடமானாய்; அருள் செய். (25)

இந்தத் திருதராஷ்டிரன் மக்கள் எல்லாரும் மற்ற அரசர் கூட்டத் தாருடன் நின் னுள் ளே (புகுகின்றனர்) பீஷ்மனும், துரோணனும், சூதன் மக னாகிய இந்தக் கர்ணனும் நம் முடைய பக்கத்து முக்ய வீரர்களும், (26)

கோரமான பற்க ளுடைய பயங்கர மான நின் வாய்களில் விரைந்து விழுகின்றனர். சிலர் நின் பல் லிடைகளில் அகப் பட்டுப் பொடி பட்ட தலைகளோடு காணப் படுகின்றனர். (27)

பல ஆறுகளின் வெள்ளங்கள் கடலையே நோக்கி ஓடி விழுவது [redacted] போல், இந்த நர லோக வீரர் நின் கனல்கின்ற வாய்களில் வந்து [redacted] விழுகின்றனர். (28)

விளக்கிற் பூச்சிகள் மிகவும் விரைவுடனே பாய்ந்து எரிகின்ற பாவகத்தில் விழுந்து நாச மடைவது போலே, உலகங்களும் மிகவும் விரைவுடன் நின் வாய்களில் வந்து புகுந்து நாச மடைகின்றன. (29)

கனல்கின்ற நின் வாய்களால் எப் புறத்தும் எல்லா உலகங்களை யும் நீ நக்குகிறாய். விஷ்ணு! நின் உக்ர மான ஒளிகள் தம் கதிர்களால் வைய முழுதையும் நிரப்பிச் சுடுகின்றன. (30)

உக்ர ரூபம் தரித்த நீ யார்? எனக்குச் சொல்லு. தேவர்களிற் சிறந்தாய், நின்னை வணங்குகிறேன். அருள் செய். ஆதியான உன்னை அறிய விரும்புகிறேன். நின் செயல் தெரிகிலேன். அறி கிலேன். (31)

கடவுள் சொல்லுகிறான்:-

உலகத்தை அழிக்கத் தக்கப் பட்ட காலமே நான். மனிதர்களை இங்கு கொல்லத் தொடங்கியுள்ளேன். இரு சேனைகளின் படைகளிலே நிற்கும் போர்வீரர்களெல்லாம் நீயின்றித் தானே வேறு யாரும் மிஞ்ச மாட்டார்கள். (32)

ஆதலால் நீ எழுந்து நில்; புகழ் எய்து; பகைவரை வென்று செழிய ராஜ்யத்தை ஆள். நான் இவர்களை முன்னமே கொன்று விட்டேன். ~~(வெறும் படையாக) நீ~~ ~~[illegible]~~ * இடக்கை வீரா, நீ வெறுங் காரணமாக ~~நின்~~ மட்டும் நின்று தொழில் செய். (33)

துரோணனையும், பீஷ்மனையும், ஜயத்ரதனையும், கர்ணனையும் மற்ற யுத்த வீரர்களையும் நான் கொன்று விட்டேன். (வெறும் படையாக) நீ கொல். அஞ்சாதே; போர் செய்; செருக் களத்தில் நீ பகைவரை வெல்வாய். (34)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:-

கேசவன் சொல்லிய இவ் வார்த்தையைக் கேட்டுப் பார்த்தன் மெய்ந் நடுக்கத்துடன் அஞ்சலி புரிந்தான். மீட்டும் கண்ணனை நமஸ்காரம் பண்ணி அச்சத்துடன் வாய் குழறி பணிந்து சொல்லுகிறான். (35)

அர்ஜுனன் சொல்லுகிறான்:-

+ ஹ்ருஷீகேசா, உன் பெருங் கீர்த்தியால் உலகம் களிப்பதும் இன்புறுவதும் பொருந்தும். ராக்ஷஸர் அச்ச முற்றுத் திசைகளில் ஓடுகிறார்கள். ஸித்தர் கூட்டத்தினர் யாவரும் நின்னைப் பணிகிறார்கள். (36)

மஹாத்மாவே, நின்னை எவ்வணம் வணங்கா திருப்பர்? நீ ஆதி கர்த்தா. பிரமனுக்கும் மூத்தாய். அனந்தா, தேவேசா, ஜகந்நிவாஸா, நீ அழிவற்ற பொருள். நீ ஸத்; நீ அஸத்; நீ அவற்றைக் கடந்த பரம். (37)

நீ ஆதி தேவன்; தொல்லோன்; நீ இந்த அகிலத்தின் பரம நிலயம். நீ அறிவோன், நீ அறி படு பொருள். நீ பரம பதம். அனந்த ரூபா, நீ இவ் வுலகினூடே பரந்து நிற்கிறாய். (38)

---

* இது பார்த்தன் பெயர். + இது கண்ணன் பெயர்.

நீ வாயு, யமன், அக்நி, வருணன்; முப்பாட்டன் ஒளிய பாட்டன்
நீ. உனக்கு ஆயிர முறை வணங்குகிறேன்; மீட்டு மீட்டும் உனக்கு
"நமோ நம:". (39)

உனக்கு முன் புறத்தே வணங்குகிறேன்; உனக்குப் பின் புறத்தே
வணங்குகிறேன். எல்லா மானாய்; உனக்கு எப் புறத்தும் வணங்குகிறேன்.
நீ எல்லையற்ற வீர்ய முடையாய், அளவற்ற வலிமை யுடையாய்.
ஸர்வத்திலும் நிறைந் திருக்கிறாய்; ஆதலால் நீ ஸர்வன். (40)

இப் படிப் பட்ட நின் பெருமையை அறியாமல், நின்னைத்
தோழ னென்று கருதித் துடுக் குற்று: "ஏ க்ருஷ்ண, ஏ யாதவா,
ஏ, தோழா" என்று தவறுதலாலேனும் அன்பாலேனும் நான் சொல்லி
யிருப்பதையும்; (41)

விளையாட்டிலும், படுக்கையிலும், இருப்பிலும், உணவிலும், தனி
யாய் ஏனும், அன்றி (மற்றவர் முன்னே) வெளியிலும், நான் உனக்கு
பரிஹாஸ மாகச் செய் திருக்கும் ~~அவமதிப்புக்களையும்~~ அவமதிப்புக்
கெல்லாம் பொறுக்கும் படி வேண்டுகிறேன், அளவற்றவனே! (42)

சராசர மாகிய இவ் வுல[கு]க்கு நீ தந்தை யாவாய். இவ்
வுலகத்தால் தொழத் தக்[க] மிகவும் சிறந்த குரு நீ. உனக்கு
நிகர் யாரு மில்லை. எனில் உனக்கு மேல் வேறு யாவர்?
மூன் றுலகங்களிலும் நின் பெருமை ஒப் பற்றது. (43)

ஆதலால், உடல் குனிய வணங்கி, நின் பால் அருள் வேட்கிறேன்.
ஈசா, வேண்டு தற் குரியாய், மகனைத் தந்தை போலும், தோழனைத்
தோழன் போலும், அன்பனை யன்பன் போலும் நீ என்னைப்
பொறுத்தல் வேண்டும். (44)

இதற்கு முன் காணாததை இன்று கண்டு மகிழ்ச்சி யுறுகிறேன்.
எனினும் என் மனம் அச்சத்தால் சோர்கிறது. தேவா, எனக்கு
நின் முன்னை வடிவத்தைக் காட்டுக. தேவேசா, ஜகந்
நிலயமே, எனக் கருள் செய்க. (45)

முன் போலவே கிரீடமும், தண்டும், கையில் சக்கரமு
மாக நின்னைக் காண விரும்புகிறேன். அகில மூர்த்தியே, ஆயிரந்
தோளாய், முன்னை நாற் றோள் வடிவின எய்துக. (46)

கடவுள் சொல்லுகிறான்:—

அர்ஜுனா, யான் அருள் கொண்டு ஆத்ம யோகத்தால் எனது பர வடிவத்தை நினக்குக் காண்பித்தேன். ஒளி மயமாய், அனந்தமாய், விச்வ மயமாய், ஆதியாகிய இவ் வடிவத்தை இதற்கு முன் நின்னைத் தவிர வேறு யாரும் பார்த்ததே கிடையாது. (47)

வேதங்களாலும், வேள்விகளாலும், கல்விகளாலும், தானங்களாலும், கிரியை களாலும், மனித உலகத்தில் என்னை இவ்வடிவத்தில் நின்னை யன்றி வேறு யாராலும் பார்க்க முடியாது. குரு குலத்தில் சிறந்த வீரா! (48)

இப்படிப் பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு கலங்காதே; மயங்காதே. அச்சம் நீங்கி இன்புற்ற மனத்துடன் எனது முன்னை வடிவத்தை நீ இதோ பார்! (49)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:—

இவ்வாறு வாஸுதேவன் அர்ஜுனனிடம் கூறி, மீண்டும் தன் பழைய வடிவத்தைக் காட்டினான். அந்த மகாத்மா மறுபடி தன் இனிய வடிவம் பெய்தி அச்சமுற்றிருந்த பார்த்தனை ஆறுதல் கொள்ளச் செய்தான். (50)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

ஜநார்த்தநா, நினது சாந்தமை பொருந்திய, இம் மானுட உருவத்தைக் கண்டு இப்போது யான் அமைதி யுற்றேன். என் அறிவு மீண்டது; இயற்கை நிலை யெய்தினேன். (51)

கடவுள் சொல்லுகிறான்:—

காண்பதற் கரிய என் வடிவத்தை நீ கண்டனை. தேவர்கள் கூட இவ் வடிவத்தைக் காண எப்போதும் விரும்பி நிற்கிறார்கள். (52)

என்னை நீ கண்ட படி, இவ் விதமாக, வேதங்களாலும், தவத்தாலும், தானத்தாலும், வேள்வியாலும் என்னைக் காணுதல் இயலாது. (53)

பரந்தப, [illegible] பக்தியால் மாத்திரமே என்னை இவ் விதமாக அறிதலும், உள்ள படி காணுதலும், என்னுட் புகுதலும் இயலும். (54)

என் தொழில் செய்வான்; எனைத் தமக் கொண்டோன்
என் னுடை அடியான், பற்றெலாம் இற்றோன்
எவ் வுயிர்க்கும் பகைமை யிலாதான்
யாவனோ? பாண்டவா, அவ னென்னை எய்துவான். (55)

இவ்வாறு உபநிஷத்தும் பிரம வித்யையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத மாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் "விச்வரூப தர்சனம்" என்ற பதினொன்றாம் அத்யாயம் முற்றிற்று.

# பன்னிரண்டாம் அத்யாயம்.

## பக்தி யோகம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

இங்ஙனம் எப்போதும் யோகத் தமர்ந்து நின்னை வழிபடும் தொண்டர்களோ, அல்லது நாசமற்ற "அவ்யக்த" வஸ்துவை வழிபடுவோரோ, இவ் விரு திறத்தாரில் யோகஞானத்திலே மேம்பட்டோர் யாவர்? (1)

கடவுள் சொல்லுகிறான்:—

என்னிடம் மனத்தைச் செலுத்தி நித்ய யோகிகளாய், உயர்ந்த சிரத்தையுடன் என்னை வழிபடுவோர் யாவர்? அவர்களே யோகத்தில் சிறந்தோரென நான் கருதுகிறேன். (2)

இனி, அழிவற்றதும், குறிப்பற்றதும், அவ்யக்தமும் (தெளிவற்றதும்) எங்கும் நிறைந்ததும், கருதொணாததும், நிலையுற்றதும், அசைவற்றதும் உறுதி கொண்டதுமாகிய பொருளை யாவர் வழிபடுகின்றனரோ; (3)

இந்திரியக் குழாத்தை நன்கு கட்டுப்படுத்தி எங்கும் ஸமபுத்தி யுடையோராய், எல்லா உயிர்களுக்கும் நன்மை புரிவோ ராகிய அவர்களும் என்னையே அடைகிறார்கள். (4)

ஆனால் "அவ்யக்தத்தில்" மனம் பதிவோர்க்குத் தொல்லை அதிகம். உடல் படைத்தோர் "அவ்யக்த" நெறி செல்லுதல் மிகவும் கஷ்டம் (5)

எல்லாத் தொழில்களையும் என் கண் துறந்து, என்னையே பரமாகக் கொண்டு, ஒருமுகமாக யோகத்தால் என்னைத் தியானித்து வழிபடுவோர் யாவரோ? (6)

என் பால் சித்தம் புகுத்திய அன்னோரை நான் மரண ஸம்ஸாரக் கடலினின்றும் விரைவில் தூக்கி விடுவேன். (7)

மனத்தை யென் பால் நிறுத்து;
மதியை என்னுட் புகுத்து;
இனி நீ என்னுளே உறைவாய்;
ஐயமில்லை. (8)

என்னிடம் ஸ்திரமாக நீ சித்தத்தைச் செலுத்த நின்னால் முடியா தென்றால், பழகிப் பழகி என்னை யடைய விரும்பு. (9)

[illegible] (10)

[illegible] (11)

[illegible] (12)

[illegible] (13)

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

இங்கு தர்மமே யான அமிர்தத்தை யாவர் சொல்லிய படி வழி பற்றுவோர், நம்பிக்கை யுடையோர், என்னை முதலாகக் கொள்வோர், இத் தகைய பக்தர் எனக்கு மிக இனியர். (20)

இங்ஙனம் உபநிஷத்தும் ப்ரஹ்ம வித்யையும் யோகசாஸ்த்ரமும் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதமுமாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில் "பக்தி யோகம்" என்ற பன்னிரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

## பதின்மூன்றாம் அத்யாயம்.

## க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாகம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:-

* ப்ரக்ருதி, புருஷன்; க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன்; ஞானம், ஞேயம் என்றிவற்றை அறிய விரும்புகிறேன். (1)

கடவுள் சொல்லுகிறான்:-

குந்தி மகனே, இந்த உடம்பு க்ஷேத்ர மென்று சொல்லப்படுகிறது. இதை அறிந்து நிற்போன் க்ஷேத்ரக்ஞ னென்று தத்வ ஞானிகள் சொல்லுகிறார்கள். (2)

பாரதா, எல்லா க்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரக்ஞன் நானே யென் றுணர். க்ஷேத்ரமும், க்ஷேத்ரக்ஞனும் எவை யென் றறியும் ஞானமே உண்மையான ஞான மென்பது என் கொள்கை. (3)

அந்த க்ஷேத்ர மென்பது யாது? எவ் வகைப் பட்டது? என்ன மாறுதல்க ளுடையது? எதிலிருந்து வந்தது? க்ஷேத்ரக்ஞன் யார்? அவன் பெருமை எப்படிப் பட்டது? — இவற்றை நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன்; கேள். (4)

அது (க்ஷேத்ரம்) ரிஷிகளால் பல வகைகளிலே பல வேறு சந்தங்களில் பாடப் பட்டது. ஹேதுவும் நிறைந்தனவும், திடமான நிச்சய முடையனவாகிய ப்ரஹ்ம ஸூத்ர பதங்களில் இசைக்கப் பட்டது. (5)

* க்ஷேத்ரம் = இடம்; க்ஷேத்ரக்ஞன் = இடத்தை அறிவோன்.
ப்ரக்ருதி = இயற்கை; புருஷன் = ஆத்மா.
ஞானம் = அறிவு; ஞேயம் = அறியப் படு பொருள்.

[illegible]
[illegible] (6)

[illegible]
[illegible]
[illegible] (7)

[illegible]
[illegible] (8)

[illegible]
[illegible]
[illegible] (9)

[illegible]
[illegible]
[illegible] (10)

[illegible]
[illegible]
[illegible] (11)

[illegible]
[illegible]
[illegible] (12)

[illegible]
[illegible]
[illegible] (13)

[illegible]
[illegible]
[illegible] (14)

[illegible]
[illegible]
[illegible] (15)

[illegible]
[illegible] (16)

110 

உயிர்களில் பகு பட்டு நில்லாமல் பகு பட்டது போல் நிற்பது. அதுவே பூதங்களைத் தாங்குவ தென் றறி. அவற்றை உண்பது; பிறப்பிப்பது. (17)

ஒளிகளுக் கெல்லாம் அஃது ஒளி. இருளுக்கு உயர்ந்த தென்ப. அதுவே ஞானம்; ஞேயம்; ஞானத்தால் எய்தப் படு பொருள். எல்லாருடைய அகத்திலும் அமர்ந்தது. (18)

இவ்வாறு க்ஷேத்ரம், ஞானம், ஞேயம் என்பவற்றைத் தொகுத்துச் சொன்னேன். என் பக்தன் இதை யறிந்து எனது தன்மையை அடைகிறான். (19)

ப்ரக்ருதி, புருஷன் இவ் விரண்டும் அநாதி யென் றுணர். வேறுபாடுகளும் குணங்களும் ப்ரக்ருதியாலே பிறப்பன வென் றுணர். (20)

காரிய காரணங்களின் ஆக்கத்துக்கு ஏது ப்ரக்ருதி யென்ப. சுக துக்கங்களின் உணர்வுக்கு ஏது புருஷ னென்ப. (21)

புருஷன் ப்ரக்ருதியில் நின்று கொண்டு, ப்ரக்ருதியால் பிறந்த குணங்களைத் துய்க்கிறான். குணங்களின் மீது வைத்த பற்றுதலே இவன் நல்லனவும் தீயனவுமாகிய யோனிகளில் பிறப்பதற்குக் காரண மாகிறது. (22)

மேற்பார்ப்போன், அநுமதி தருவோன், தாங்குவோன், உண்பவன், மகேச்வரன் இவ்வாறு உடம்பி லுள்ள பரம புருஷன் பரமாத்மா வென்றே சொல்லப் படுகிறான். (23)

இவ்வாறு புருஷனையும், ப்ரக்ருதியையும், அதன் குணங்களையும் அறிந்தோன் எவ்வா றொழுகினும் இனிப் பிறவான்; அவனுக்கு மறுபிறப் பில்லை. (24)

சிலர் ஆத்மாவில் ஆத்மாவால் ஆத்மாவை அறிகின்றனர். பிறர் ஸாங்கிய யோகத்தால் அறிகின்றனர்; பிறர் கர்ம யோகத்தால். (25)

இவ்வண்ணம் அறியாத மற்றும் சிலர் பிறர் சொல்லக் கேட்டு வழிபடுகின்றனர். அவர்களும் அந்தக் கேள்வியின் பயனாய் மரணத்தை வெல்வார். (26)

பரதர் தலைவா, ஸ்தாவர மாயினும் ஜங்கம மாயினும் ஏதேனும் பிறக்கு மாயின், அது க்ஷேத்ரமும் க்ஷேத்ரஜ்ஞனும் சேர்ந்திருப்பதால் பிறப்ப தென் றறி. (27)

எல்லா உயிர்களிலும் சமமாக நிற்போன் பரமேசுவரன். அழிவனவற்றில் அழியாதான். அவனைக் காண்போனே காட்சி யுடையோன். (28)

[illegible] (29)

[illegible] (30)

[illegible] (31)

[illegible] (32)

[illegible] (33)

[illegible] (34)

[illegible] (35)

[illegible]

## பதினான்காம் அத்தியாயம்.

## மூன்று குணப் பாகுபாடு.

கடவுள் சொல்லுகிறான்:—

ஞானங்களில் சிறந்ததும் மேலான பரம ஞானத்தை உனக்கு மீட்டு முரைக்கிறேன். அதை யறிந்து முனிவரெல்லாரும் இவ் வுலகத்திலே யே உயர்ந்த பெருஞ் சித்தியடைந்தார்கள். (1)

இந்த ஞானத்தை யடைந்து அதனால் என் னியல்பு பெற்றோர், படைப்புக் காலத்தில் பிறவார். ஊழியாலும் சாக மாட்டார். (2)

பெரிய பரப் பிரமமே எனக் காதாரம். அதில் நான் கருத் தரிக்கிறேன். பாரதா, எல்லா உயிர்களும் அதிலே தான் பிறக்கின்றன. (3)

எல்லாக் கருக்களிலும் பிறக்கும் வடிவங்க ளனைத்திற்கும் பிரமமே பெரிய காரணம். நான் விதை தரும் பிதா. (4)

ஸத்வம், ரஜஸ், தமஸ்— இந்த குணங்கள் ப்ரக்ருதியில் தோன்றுவன. பெருந் தோளாய், இவை உடலில் அழி வற்ற ஆத்மாவைப் பிணிக்கின்றன. (5)

அவற்றுள்ளே ஸத்வம் நிர்மலத் தன்மையால் ஒளி கொண்டது நோவற்றது. பாவமற்றோய், அது இன்பச் சேர்க்கையாலும் ஞானச் சேர்க்கையாலும் கட்டுப் படுத்துவது. (6)

ரஜோ குணம் விருப்ப இயல் புடையது; அவாவின் சேர்க்கையால் பிறப்பது. குந்தி மகனே, அது ஆத்மாவைத் தொழிற் சேர்க்கையால் கட்டுகிறது. (7)

தமோ குணம் அஞ்ஞானத்தில் பிறப்ப தென் றுணர். (இது வே) எல்லா ஜீவர்களையும் மயக்கஞ் செய்வது. தவறுதலாலும், சோம்பலாலும், உறக்கத்தாலும் அது கட்டுப் படுத்துகிறது, பாரதா! (8)

ஸத்வம் இன்பத்திலே பற்றுதல் விளைவிக்கிறது. பாரதா, ரஜோ குணம் செய்கையில் பற்றுவிக்கிறது. தமோ குணம் ஞானத்தை மூடி (ஜீவனை) மயக்கத்தில் பிணிக்கிறது. (9)

பாரதா, (சில வேளை) ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அடக்கி ஸத்வம் இயல்கிறது. (சில வேளை) ஸத்வத்தையும், தமோ குணத்தையும் அடக்கி ரஜோ குணம் நிற்கிறது. அங்ஙனமே ஸத்வத்தையும் ரஜோ குணத்தையும் அடக்கித் தமஸ் ஓங்குகிறது. (10)

இந்த உடம்பில் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்கு மாயின், அப்போது ஸத்வ குணம் வளர்ச்சி பெற்றதென் றறியக் கடவாய். (11)

அவா, முயற்சி, தொழி லெடுப்பு, அமைதி யின்மை, விருப்பம்,— இவை ரஜோ குணம் மிகுதிப் படுவதால் தோன்றுகின்றன— பாரதர் காளையே. (12)

ஒளி யின்மை, முயற்சி யின்மை, தவறுதல், மயக்கம், இவை தமோ குணம் ஓங்குமிடத்தே பிறப்பன; குரு குலச் செல்வமே! (13)

ஸத்வம் ஓங்கி நிற்கையிலே சரீரி இறப்பானாயின், மாசற்றோர் வாழும் உத்தம ஞானிகளின் உலகங்களை அடைகிறான். (14)

ரஜோ குணத்தில் இறப்போன் கர்மப் பற்றுடையோர் நடுவே பிறக்கிறான். அல்லாது தமஸில் இறப்போன் மூட கர்ப்பங்களில் தோன்றுகிறான். (15)

ஸத்வ இயல் புடைய கர்மத்துக்கு நன்மையே நிர்மலமாகிய பய னென்பர். ரஜோ குணத்தின் பயன் துன்பம்; தமோ குணத்தின் பயன் அஞ்ஞானம். (16)

ஸத்வத்தால் ஞானம் பிறக்கிறது; ரஜோ குணத்தால் அவா; தமோ குணத்தால் தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் தோன்றுகின்றன. (17)

ஸத்வ குணத்தில் நிற்போர் மேலே செல்கிறார்கள். ரஜோ குணமுடையோர் நடுவே நிற்கிறார்கள். தாமஸர் மிகவும் இழிய குணங்களுக்கு வசப்பட்டுக் கீழோராய்க் கீழே செல்வர். (18)

குணங்களைத் தவிர வேறு கர்த்தா இல்லை யென்பதைக் காண்போன் குணங்களுக்கு மேற்பட்ட பொருளையும் தெரிந்து அறிவானாயின் என் இயல்பை அறிவான். (19)

உடம்பிலே பிறக்கும் இந்த மூன்று குணங்களையும் கடந்து ~~[illegible]~~ பிறப்பு, சாவு, மூப்பு, வருத்தம் என்பவற்றினின்றும் விடுபட்டோன் அமிர்த நிலை யடைகிறான். (20)

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

இறைவனே, மூன்று குணங்களையும் கடந்தோன் எந்த அடையாளங்க ளுடையவன்? எவ்வாறு ஒழுகுவோன்? இந்த மூன்று குணங்களையும் அவன் எவ்வாறு கடக்கிறான்? (21)

[illegible]

[illegible] (22)

[illegible] (23)

[illegible] (24)

[illegible] (25)

[illegible] (26.)

[illegible] (27)

[illegible]

## பதினாறாம் அத்தியாயம்.

### புருஷோத்தம யோகம்.

கடவுள் சொல்லுகிறார்:—

*அஸ்வத்தம் மேலே வேர்களும் கீழே கிளைகளுமுடைய தோர் அரச மரத்தையும் போன்றதென்பர். அதன் இலைகளே வேதங்கள்; அதை அறிவோனே வேத மறிவோன். (1)

அதன் கிளைகள் குணங்களால் வளர்ந்து விஷயத் துளிர்களுடன் கீழும் மேலும் பரந்து கிடக்கின்றன. அதன் வேர்கள் கீழ் நோக்கி மனித உலகத்தில் கர்மத் தொடர்புகளைத் தாங்குகின்றன. (2)

இதனுருவம் இவ்வுலகத்தில் இங்ஙனம் காணப் படுவதில்லை. முடிவும், ஆதியும், நிலைக்களமும் அதற் கில்லை. நன்கு ஊன்றிய வேருடைய இந்த அரச மரத்தைப் பற்றின்மை யென்னும் வலிய வாளால் வெட்டி வீழ்த்திவிட்டு; (3)

அப்பால், எவ்விடம் புகுந்தோர் மீண்டு திரும்பாரோ அப்பதத்தைத் தேடவேண்டும். (எம் பழ முதல்வோன்) என நாடி யாவனிடத்தே ஆதித் தொழில் பெருகி வந்ததோ, அந்த ஆதி புருஷனைச் சார்ந்து நிற்கிறேன். (4)

செருக்கும் மயக்கு மற்றோர்; சார்புக் குற்றத்தை வென்றோர்; ஆத்ம ஞானத்தில் எப்போதும் நிற்போர்; காமங்களினின்றும் நீங்கினோர்; இன்ப, துன்ப மென்ற பெயருடைய இரட்டைகளினின்று விடுபட்டோர்; மயக்கமற்றோர்;— இன்னோர் அந்த நாசமற்ற பதத்தை எய்துகின்றனர். (5)

அதற்கு சூரியனும், சந்திரனும், தீயும் ஒளி செய்வதில்லை. எங்கு சென்றோர் மீள்வதில்லையோ, அதுவே என் பரமபதம். (6)

என தம்சமே ஜீவ லோகத்தில் என்றும் உள்ள ஜீவனாகி, இயற்கையிலுள்ள மனம் ஆறாவதா— கிய இந்திரியங்களையும் கவர்கிறது. (7)

---

*அஸ்வத்தம் = ஜகத்தின் தெளிவு மாறு உள் நிலை.

[illegible] (8)

[illegible] (9)

[illegible] (10)

[illegible] (11)

[illegible] (12)

[illegible] (13)

~~[illegible]~~

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible]

இவரில் வேறுபட்டோன் உத்தம புருஷன். அவனே பரமாத்மா
எனப் படுவோன். அவன் மூன்று உலகங்களிலும் புகுந்து
அவற்றைத் தரிக்கின்றான். கேடற்ற ஈசுவரன். (17)

நான் அழிவு கடந்தோனாதலாலும், அக்ஷர புருஷனைக் காட்டிலும்
உயர்ந்தோனாதலாலும் உலகத்தாராலும் வேதங்களாலும் புருஷோத்தம
னென்று கூறப் படுகிறேன். (18)

மடமை தீர்ந்தவனாய், எவன் யானே புருஷோத்தம னென்பதை
அறிவானோ, அவனே எல்லா மறிந்தோன். அவன் (19)
என்னை எல்லாத் தன்மையாலும் வழிபடுகிறான்.

குற்றமற்றோய், இங்ஙனம் மிகவும் ரகஸ்யமான இந்த
சாஸ்திரத்தை உனக்கு உரைத்தேன். பாரதா, இதை
யுணர்ந்தோன் புத்திமானாவான். அவனே செய்யத்
தக்கது செய்தான். (20)

இங்ஙனம் உபநிஷத்துக்கள் பகவத்கீதையும் யோகசாஸ்திரமும்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமுமாகிய ஸ்ரீமத் பகவத்கீதையில்
“புருஷோத்தம யோகம்” என்ற பதினைந்தாம் அத்யாயம்
முற்றிற்று.

## பதினாறாம் அத்யாயம்.

### தேவ ஸம்பத்தும், அஸுர ஸம்பத்தும்.

கடவுள் சொல்லுகிறான்:—

அஞ்சாமை; உள்ளத் தூய்மை; ஞான யோகத்தில் உறுதி; ஈகை; தன்னடக்கம்; வேள்வி; வேதக் கற்றல்; தவம்; நேர்மை. (1)

கொல்லாமை; வாய்மை; சினவாமை; துறவு; அமைதி; வஞ்சமின்மை; ஜீவதயை; அவாவின்மை; மென்மை; நாணுடைமை; சலியாமை. (2)

ஒளி; பொறை; உறுதி; சுத்தம்; துரோகமின்மை; இறுமாப்பின்மை; — இவை தேவ ஸம்பத்தை எய்தியவனிடம் தோன்றுகின்றன; பாரதா! (3)

டம்பம், இறுமாப்பு, கோபம், சினம், கடுமை, அஞ்ஞானம் — இவை அசுர சம்பத்தை எய்தியவனிடம் காணப் படுகின்றன, பார்த்தா! (4)

தேவ சம்பத்தால் விடுதல் உண்டாம். அசுர சம்பத்தால் பந்த மேற்படும். பாண்டவா, தேவ சம்பத்தை எய்தி வந்தாய்; துயரப் படாதே. (5)

இவ் வுலகத்தில் உயிர்ப் படைப்பு இரண்டு வகைப் படும் — தேவ இயல் கொண்டது, அசுர இயல் கொண்டது. தேவ இயல் கொண்டதை விரித்துச் சொன்னேன். பார்த்தா, அசுர இயல் கொண்டதைச் சொல்லுகிறேன். (6)

அசுரத் ~~இயல்பு உடையோர்~~ தன்மை கொண்டோர் தொழில் வகையையும் விடு வகையையும் அறியார். தூய்மையேனும், ஒழுக்க மேனும், வாய்மையேனும் அவரிடம் காணப் படுவதில்லை. (7)

அவர்கள் இவ் வுலகம் உண்மையற்ற தென்றும், நிலையற்ற தென்றும், கடவுளற்ற தென்றும் சொல்லுகிறார்கள். இது ஒன்று பிறிதிற் பிறந்த தென்றும் வெறுமே காமத்தை ஹேது வாக உடைய தென்றும் சொல்லுகிறார்கள். (8)

இந்தக் காட்சியால் நிலை பெற்று அற்ப புத்தி யுடைய அந்த நஷ்டாத்மாக்கள் உலகத்துக்குத் தீங்கு செய்வோராய், அதன் நாசத்துக் காகக் கொடிய தொழில் செய்கின்றனர். (9)

நிரப்ப வொண்ணாத காமத்தைச் சார்ந்து, டம்பமும், கர்வமும் மதமும் பொருந்திய வராய், மயக்கத்தால் பொய்க் கொள்கைகளைக் கொண்டு அசுத்த நிச்சயங்க ளுடையோ ராய்த் தொழில் புரிகிறார்கள். (10)

பிரளய மட்டே நீளும் எல்லை யற்ற கவலைகளைப் பொருந்தி, காமோப போகங்களே சிறந்தன வென்பதில் ஈடுபட்டோராய், "உண்மையே இவ்வளவு தான்" என்று நிச்சய முடையோராய், (11)

நூற்றுக் கணக்கான ஆசைக் கயிறுகளால் கட்டுண்டு, காமத்திலும் கிரோதத்திலும் ஈடுபட்டோ ராய்க் காம போகத்தின் பொருட்டு அநி யாயமாக பொருட் குவைகள் சேர்க்க விரும்புகிறார்கள். (12)

"இன்று இன்ன லாப படைத்தேன்; இன்ன மனோரதத்தை இனி எய்துவேன்; இன்னதை யுடையேன்; இன்ன பொருள் இனிப் பெறுவேன். (13)

119

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

[illegible] (20)

[illegible] (21)

[illegible] (22)

[illegible] (23)

[illegible] (24)

[illegible]

# பதினேழாம் அத்தியாயம்.

## மூவகைச் சிரத்தை.

120

62

அர்ஜுனன் கேட்கிறான்:-

கண்ணா, சாஸ்த்ர விதியை மீறி, ஆனால் சிரத்தை யுடன், வேள்வி செய்வோருக்கு என்ன நிலை கிடைக்கிறது? ~~[illegible]~~ ஒளி நிலையா? இருட்டு நிலையா? அல்லது இடை நிலையா? (ஸத்வமா, ரஜஸா, தமஸா?) (1)

கடவுள் சொல்லுகிறான்:-

ஜீவர்க்கெல்லாம் சிரத்தை இயற்கையாய் மூன்று வகையாகத் தோன்று கிறது: ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என. அவற்றைக் கேள். (2)

பாரதா, யாவருக்கும் தத்தம் உள் இயல்புக் கொத்தபடி சிரத்தை அமைகிறது. †புருஷன் †சிரத்தை மய மானவன். எவன் எந்தப் பொருளில் சிரத்தை யுடையனோ, அந்தப் பொருளே தா னாகிறான். (3)

ஒளி ~~[illegible]~~ யியல் புடையோர் வானவர்க்கு வேள்வி செய்கின்றனர். ரஜோ குண முடையோர் யக்ஷர்க்கும் ராக்ஷஸர்க்கும் வேள்வி செய்கிறார்கள். மற்றோராகிய தமோ குண முடையோர் பிரேத, பூத கணங்களுக்கு வேள்வி செய்கிறார்கள். (4)

(சிலர்) சாஸ்த்ர விதியை மீறி, டம்பமும் அஹங்காரமு முடையராய், காம ராகத்திலும் பலத்திலும் வலிமையுடையராய், கோர மான தவஞ் செய்கிறார்கள். (5)

இவர்கள் அறிவு கெட்டோராய்த் தம் உடம்பிலுள்ள பூதத் தொகுதியையும் அகத்திலுள்ள என்னையும் வருத்துகிறார்கள். இவர்கள் அசுர நிச்சய முடையோ ரென் றுணர். (6)

ஒவ்வொருவருக்கும் பிரிய மான உணவும் மூன்று வகைப்படும். வேள்வியும் தவமும் தானமும் அப்படியே மூன்று வகைப்படுகின்றன. அவற்றின் வேற்றுமையைக் கேள். (7)

உயிர், சக்தி, பலம், ஆரோக்கியம், இன்பம், பிரீதி இவற்றை வளர்ப்பன; ரஸமுடையன; நெய்ப் பசையன; உறுதி யுடையன; மனமுகந்தன; இவ் வுணவுகள் ஸத்வ குண முடையோருக்குப் பிரிய மானவை (8)

---

† சிரத்தாத்ரய விபாகம்.

[illegible] (9)

63

[illegible] (10)

[illegible] (11)

[illegible] (12)

[illegible] (13)

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

[illegible] (20)

[illegible] (21)

தகாத இடத்தில், தகாத காலத்தில், தகாதவர்க்கே செய்யப் படுவதும், மதிப் பின்றி இகழ்ச்சி யுடன் செய்யப் படுவது மாகிய தானம் தாமஸ மெனப் படும். (22)

"ஓம் தத் ஸத்" என்று ப்ரம்மம் மூவகையாகக் குறிப் பிடப் படுகிறது. அதிலிருந்து ஆதியில் ப்ராம்மணர்களும் வேதங்களும், யக்ஞங்களும் படைக்கப் பட்டன. (23)

ஆதலால், ப்ரம்மவாதிகள் விதிப் படி புரியும் யக்ஞம், தானம், தவம் என்ற கிரியைகள் எப் போதும் "ஓம்" என்று உச்சரித்துச் செய்யப் படுகின்றன. (24)

"தத்" என்று சொல்லிப் பயனைக் கருதாமல், பல வகைப் பட்ட யக்ஞமும் தவமும் தானமு மாகிய கிரியைகள் மோக்ஷத்தை விரும்பு வோரால் செய்யப் படுகின்றன. (25)

"ஸத்" என்ற சொல் உண்மை என்ற பொருளிலும் நன்மை என்ற பொருளிலும் வழங்கப் படுகிறது. பார்த்தா, புகழ்த்தக்க செயல்களைக் குறிப்பதற்கும் "ஸத்" என்ற சொல் வழங்குகிறது. (26)

யக்ஞம், தவம், தானம் இவற்றில் உறுதி நிலையும் "ஸத்" எனப் படுகிறது. அவற்றின் [illegible] பொருட்டுச் செய்யும் கர்மமும் "ஸத்" என்றே சொல்லப் படும். (27)

அச்ரத்தையுடன் செய்யும் யக்ஞமும், தானமும், தவமும், [illegible] "அஸத்" எனப் படும். பார்த்தா, அவை மறுமையிலும் பயன் படா, இம்மையிலும் பயன் படா. (28)

இவ்வாறு ப்ரம்மவித்யையும், யோகசாஸ்திரமும், ஸ்ரீ க்ருஷ்ண ஸம்வாதமு மாகிய கீதை உபநிஷத்தில் "ஸ்ரத்தா த்ரய விபாக" என்ற பதினேழாம் அத்யாயம் முற்றிற்று.

## பதினெட்டாம் அத்தியாயம்

## ஸந்யாஸ யோகம்

அர்ஜுனன் சொல்லுகிறான்:-

உயர் புயத்தோய், கண்ணா, கேசியைக் கொன்றோய், @ஸந்யாஸத்தின் இயல்பையும் தியாகத்தின் இயல்பையும் பிரித்துக் கேட்க விரும்புகிறேன். (1)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:-

விருப்பத்தால் செய்யப் படும் செய்கைகளைத் துறப்பது ஸந்யாஸமென்று புலவர் தெளிவர். எல்லாச் செய்கைகளின் பயன்களையுந் துறந்து விடுதல் தியாக மென்று ஞானிகள் கூறுவர். (2)

சில அறிஞர் செய்கையைக் குற்றம் போலக் கருதி விட்டு விட வேண்டு மென்கிறார்கள். வேறு சிலர் வேள்வி, தானம், தவம் என்ற செய்கைகளை விடக் கூடா தென்கிறார்கள். (3)

பாரதரில் சிறந்தவனே, புருஷப் புலியே, தியாக விஷயத்தில் எனது நிச்சயத்தைச் சொல்லுகிறேன்; கேள். தியாகம் மூன்று வகையாகக் கூறப் படுகிறது. (4)

வேள்வி, தானம், தவம் என்ற செய்கைகளை விடக் கூடாது. அவற்றைச் செய்யவே வேண்டும். வேள்வியும், தானமும், தவமும் அறிவுடையோரைத் தூய்மைப் படுத்துகின்றன. (5)

ஆனால், பார்த்தா, இச் செய்கைகளைக் கூடப் பற்றின்றியும், பயன்களை வேண்டாமலும் செய்ய வேண்டு மென்பது என் உத்தமமான நிச்சயக் கொள்கை. (6)

+ நியமத்தின் படி பூண்ட செய்கையைத் துறத்தல் தகாது. மதி மயக்கத்தால் அதை விட்டு விடுதல் தமோ குணத்தால் நேர்வ தென்ப. (7)

உடம்புக்கு வருத்தம் நேரு மென்று பயத்தால், ஒரு செய்கையைத் துன்ப மாகக் கருதி அதை விட்டு விடுவோன் புரியும் தியாகம் ரஜோ குணத்தின் பாற் பட்டது. அதனால் அவன் தியாகப் பயனை அடைய மாட்டான். (8)

நியமத்துக் கிணங்கிய செய்கையை, 'இது செய்யத் தகுவது' என்ற எண்ணத்தால் செய்து அதில் பற்றையும், பயன் வேண்டுதலையும் ஒருவன் விட்டு விடுவானாயின், அவனுடைய தியாகமே ஸாத்விக மெனப் படும். (9)

ஸத்வ குணத்தில் கலந்து, மேதாவியாய், ஐயங்களை யறுத்த தியாகி இன்ப மற்ற செய்கையைப் பகைப்பதில்லை; இன்ப முடைய செய்கையில் * ஆசை யுறுவதில்லை. (10)

---

@ ஸந்யாஸம் = துறவு; தியாகம் = விடுதல் (இவ்விரண்டின் வேற்றுமை [illegible])

+ நியமம் = ஒழுங்கு; கட்டளை; கடமை [illegible] * ஆசை = பற்றுதல். [illegible]

[illegible] (11)

[illegible] (12)

[illegible] (13)

[illegible] (14)

[illegible] (15)

[illegible] (16)

[illegible] (17)

[illegible] (18)

[illegible] (19)

[illegible] (20)

[illegible] (21)

[illegible] (22)

[illegible] (23)

(18-[illegible] 12-[illegible]) [illegible]

[illegible] (24)

[illegible] (25)

[illegible] (26)

[illegible] (27)

[illegible] (28)

[illegible] (29)

[illegible] (30)

[illegible] (31)

[illegible] (32)

[illegible] (33)

[illegible] (34)

[illegible] (35)

பாரதர் தலைவனே, இப்போது மூன்று வகைய இன்பங்களைச் சொல்லுகிறேன், கேள். எதனிலே ஒருவன் பழகிப் பழகி உவகை யடைந்து பெறுவானோ, எதனில் துக்க நாச மெய்துவானோ, (36)

எது தொடக்கத்தில் விஷத்தை யொத்ததாய், விளைவில் அமிர்த மொப்பதாவதோ, அந்த இன்பமே ஸாத்விக மாகும்; அஃது தன் மதியின் தெளிவிலே பிறப்பது. (37)

விஷயங்களிலே புலன்களிற் பொருந்துவதனால், தொடக்கத்தில் அமுதைப் போலிருந்து, விளைவில் நஞ்சு போன்றதாய் முடியும் இன்பம் ராஜஸ மெனப்படும். (38)

தொடக்கத்திலும் இறுதியிலும் ஆத்மாவுக்கு மயக்கம் விளைப்பதாய், உறக்கத்தி னின்றும் சோம்பரி னின்றும் தவறுதலி னின்றும் பிறக்கும் இன்பம் தாமஸ மென்று சொல்லப்படும். (39)

இயற்கையால் தோன்றும் இம் மூன்று குணங்களி னின்றும் விடுபட்ட உயிர் மண்ணுலகத்திலு மில்லை; வானுலகத்தில் தேவர்களிடையு மில்லை. (40)

பரந்தபா, பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்க் குடைய தொழில்கள் அவரவர் இயல்பால் விளையும் குணங்களின் படி வகுப் புற்றனவாம். (41)

அகக் கரணத்தை யடக்குதல், புறக் கரணத்தை யடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், விஞ்ஞானம், ஆஸ்திக்யம், இவை இயல்பாலே தோன்றும் பிராமண கர்மங்களாம். (42)

சூரத் தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரிற் புறங்காட்டாமை, ஈகை, இறைமை — இவை இயற்கையாலே தோன்றும் க்ஷத்திரிய கர்மங்களாம். (43)

உழவு, பசுக்காத்தல், வாணிகம் இவை இயற்கையாலே பிறக்கும் வைசிய கர்மங்களாம். தொண்டு புரிதல் சூத்திரருக்கு இயற்கையால் ஏற்பட்ட தொழில். (44)

தனக்குத் தனக்குரிய கர்மத்தில் மகிழ்ச்சி யுறும் மனிதன் ஸித்தி பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன் எவ்வணம் ஸித்தி யடைகிறா னென்பது சொல்லுகிறேன், கேள். (45)

உயிர்களுக்குச் செயல் பிறப்பிட மாய், இவ் வையக மெங்கும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஸித்தி யடைகிறான். (46)

பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தை குண மின்றிச் செய்தலும் நன்று. இயற்கையா லேற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவ மடைய மாட்டான். (47)

127

குந்தி மகனே, இயல் பான தொழில் குறை யுடைய தாயினும், அதைத் துறக்க லாகாது; நெருப்பைப் புகை சூழ்ந் திருப்பது போல், எல்லாத் தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன. (48)

எங்கணும் பற்றிலா மதியுடையோனாய்,
தன்னை வென்று, விருப்பற் றொழிந்து
ஸந்நியாஸ் செயலறவாப் ~~[illegible]~~ பெரிய தொழிற்று வெற்றியைத்
துறவினால் எய்துவான். (49)

ஸித்தி யடைந்தவன் எவ்வணம் பிரமத்தில் ~~[illegible]~~ கலப்ப தாகிய மேல் நிலை ஞான நிலை யெய்துவா னென்பதைக் கூறுகிறேன், கேள். (50)

தூய்மை பெற்ற புத்தி யுடையவனாய், உறுதியால் தன்னைக் கட்டுப் படுத்தி, ஒலி முதலிய விஷயங்களைத் துறந்து, விருப்பு வெறுப்புக்களை எறிந்து விட்டு; (51)

தனி யிடங்களை நாடுவோனாய், ஆகாரங் குன்றி, வாக்கையும் உடம்பையும் மனத்தையும் வென்று, தியான யோகத்தில் ஈடு பட்டு, எப்போதும் பற் றின்மையைச் சேர்ந்து நிற்பவனாய்; (52)

அஹங்காரம், வலிமை, செருக்கு, காமம், சினம், உடைமை — இவற்றை விட்டு, ※மமகாரம் நீங்கி, சாந்த நிலை கொண்டவன் பிரம மாகத் தகுவான். (53)

பிரம நிலை பெற்றோன்; ஆனந்த முடையோன்; துயரற்றோன்; விருப்பற்றோன்; எல்லா உயிர்களையும் சம மாக நினைப்போன்; உயர்ந்த தாகிய என் பக்தியை அடைகிறான். (54)

யான் எவ் வள வுடையேன், யாவன், என என்னை யொருவன் உள்ள படி பக்தியாலேயே அறிகிறான். என்னை உள்ள படி அறிந்த வுட னேயே "தத்" (அது) எனப் படும் பிரமத்தில் புகுவான். (55)

எல்லாத் தொழில்களையும் எப்போதும் செய்து கொண் டிருந்தாலும், என்னையே சார் பாகக் கொண்டோன் என தருளால் அழி வற்ற நித்திய பதவியை எய்து~~[illegible]~~கிறான். (56)

அறிவினால் செயல்களை யெல்லாம் எனக் கென்று துறந்து விட்டு என் னிடத்தே ஈடு பட்டு, புத்தி யோகத்தில் சார் புற்று, எப்போதும் என்னைச் சித்தத்தில் கொண் டிரு. (57)

என்னைச் சித்தத்தில் கொண்டிருப்போன் எல்லாத் தடைகளையும் என தருளால் கடந்து செல்வான். அன்றி நீ அஹங்காரத்தால் இதனைக் கேளாது விடுவா யெனில் பெரிய நாசத்தை அடைவாய். (58)

※ மமகாரம் = உடைமை யுணர்ச்சி

அஹங்காரத்தி வசப் பட்டு : 'இனிப் போர் புரியேன்' என்று
துணிவா யாயின், இந்த துணிவு பொய்மைப் பட்டுப் போம்.
இயற்கை உன்னைப் ^ போரிற் பணிக்கும். (59)

இயற்கையில் தோன்றிய ஸ்வகர்மத்தால் கட்டுண் டிருக்கும் நீ மயக்கத்தால் அதனைச் செய்ய விரும்பா யெனினும் நின் வச மின்றி யேனும் அதனைச் செய்ய லாவாய். (60)

அர்ஜுனா, எல்லா உயிர்களுக்கும் ஈசன் உள்ளத்தில் இருக்கிறான். மாயையால் அவன் எல்லா உயிர்களையும் சக்கரத்தி லேற்றிச் சுழற்று கிறான். (61)

பாரதா, எல்லா வழிவகைகளிலும் அவனையே சரணடைந்து அவ னருளால் பரசாந்தி யாகிய நித்ய ஸ்தானத்தை யெய்துவாய். (62)

இவ்வண்ணம் ரஹஸ்யத்திலும் ரஹஸ்ய மாகிய ஞானத்தை உனக் குரைத் தேன். இதனை முற்றிலும் ஆராய்ச்சி செய்து எப்படி இஷ்டமோ அப்படிச் செய். (63)

மீட்டு மொரு முறை எல்லாவற்றிலும் சிறந்த ரஹஸ்ய மாகிய எனது பரம வசனத்தைக் கேள். எனக்கு நீ திடமான நண்பன். ஆதலால் உனக்கு ஹிதத்தைச் சொல்லுகிறேன். (64)

உன் மனத்தை எனக் காக்குக.
என் தொண்ட னாகுக.
எனக் கென வேள்வி செய்தி என்னையே வணங்குக.
என்னை யெய்துவாய். உண்மை யாகவே
உனக் கிது சபத முரைக்கிறேன்.
நீ எனக் கினியை. (65)

எல்லா அறங்களையும் விட்டு விட்டு என்னையே சரண் புகு.
எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன்.
துயரப் படாதே! (66)

இதை எப்போதும் தவமிலாதோனுக்கும், பக்தி யில்லாதோனுக்கும், கேட்க விரும்பா தோனுக்கும், என்பால் பொறாமை யுடையோனுக்கும் சொல்லாதே. (67)

இந்தப் பரம ரஹஸ்யத்தை என் பக்தர்களிடையே சொல்வோன் என்னிடத்தே பரம பக்தி செலுத்தி என்னையே யெய்துவான். ஐய மில்லை. (68)

மானுட ருள்ளே, அவனிற் காட்டிலும் எனக் கினிமை செய்வோன் வே றில்லை. உலகத்தில் அவனிற் காட்டிலும் எனக் குகந்தவன் வே றொருவனு மாகான். (69)

நம் முடைய இந்த தர்ம மய மான ஸம்பாஷணையை எவன் படிப்பானோ, அவன் செய்யும் அந்த ஞான யக்ஞத்தால் நான் திருப்தி பெறுவேன்.
இஃது என் கொள்கை. (70)

அசூயுதல் கொண்டு பொருளை போக்கி — இதனைக்
~~[illegible]~~ கேட்பது மட்டுமே செய்வானெனினும்
அவனும் [illegible] யடைவான். அப்பால்;
புண்ணியச் செயலினார் சென்று சேர் உலகங்க
ளெய்துவான். (71)

பார்த்தா, இத்தனை ஏகாக்ர மாக்கி இதை நீ கேட்டு
வந்தனையா? தனஞ்சயா, உன் அஞ்ஞான மயக்கம் அழிந்ததா? (72)

அர்ஜுனன் சொல்லுகிறான்:

மயக்க மழிந்தது நின்னருளாலே
அச்சுதா, நான் நினை வடைந்தேன்
ஐயம் விலகி நிற்கிறேன் —
செய்யச் சொல்வது செய்வேன். (73)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:

இப்படி நான் வாஸுதேவனுக்கும் மஹாத்மாவாகிய பார்த்தனுக்கும்
நிகழ்ந்த அற்புத மான — புளகந் தரக் கூடிய — இந்த ஸம்பாஷணையைக்
கேட்டேன். (74)

யோகக் கடவுளாகிய கண்ணன் இந்தப் பரம ரகஸ்ய மான
யோகத்தைத் தான் நேராக வே சொல்லும் போது நான் அதை
வியாஸ னருளால் கேட்டேன். (75)

அரசனே, கேசவார்ஜுனர்களின் [illegible] இந்தப் பு[illegible]
ஸம்பாஷணையை நினைத்து நினைத்து நான் மீட்டு மீட்டும் களிப் பெய[illegible]
கிறேன். (76)

அரசனே, ஹரியின் மி[illegible] அற்புத மான அந்த ரூபத்தை நினைத்து
நினைத்து எனக்குப் பெரிய ஆச்சர்ய முண்டாகிறது. மீட்டு
மீட்டும் களிப் படைகிறேன். (77)

கண்ணன், யோகக் கடவுள், எங் குளனோ,
வில்லாளி பார்த்திய வீரனுந் தானங்கே?
அங்கு திருவும் ஜெயமும் வெற்றியும்
நிலை தவறாத நீதியும் நிற்குமே.
இஃது என் மதம். (78)

இவ்வாறு உபநிஷத்துக்கள் பிரம வித்தையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணா
ர்ஜுன ஸம்வாதமுமாகிய ஸ்ரீ பகவத் கீதையில் ஸந்நியாஸ யோகம்
என்ற பதினெட்டாம் அத்தியாயம் முடிந்தது.